வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk
மலர் : 04
27.10.2023 வெள்ளிக்கிழமை
இதழ் : 322
பக்கங்கள் : 16

MARUTHI MONEY EXCHANGE
மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

## மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக யாழில் நேற்று தீப்பந்த போராட்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ். மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் நாட்டில் ஏற்பட்ட மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு எதிராக அமைதிவழி தீப்பந்த போராட்டம் நேற்று மாலை முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அலுவலத்தின் முன்பாக

11



## அவுஸ்திரேலிய பொலிஸாரின் ஒத்துழைப்புடன் கடல்சார் குற்றப் புலனாய்வுப் பிரிவு மன்னாரில்!

மன்னார், ஒக். 27

அவுஸ்திரேலிய பொலிஸாரின் ஒத்துழைப்புடன் ஆட்கடத்தல், மனித வியாபாரம் கடல்சார் குற்றப்புலனாய்வுப் பிரிவு மன்னாரில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் - கோந்தைப் பிட்டியில் இந்த புதிய குற்றப் புலனாய்வுப் பிரிவு

11



## பாடசாலைகளுக்கு விடுமுறை

கொழும்பு, ஒக். 27

அரச மற்றும் அரச அனுமதி பெற்ற பாடசாலைகளின் விடுமுறை தொடர்பில் கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி 2023ஆம் ஆண்டுக்கான இரண்டாம் தவணை விடுமுறை இன்று வெள்ளிக்கிழமை வழங்கப்படவுள்ளது.

மேலும் மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகள் நவம்பர் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

## யாழ். நகரில் நூதனமான முறையில் காஸ் சிலிண்டர் திருடியோர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ்ப்பாண நகரில் கடந்த சில நாட்களாக நூதன மான முறையில் கடைகள் மற்றும் வீடுகளில் காஸ் சிலிண்டர்கள் திருடிய இருவர் யாழ்ப்பாண குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 10 இற்கும் மேற்பட்ட காஸ் சிலிண்டர்கள்

11



# யாழ்.மாவட்டத்தில் பொலிஸாரின் செயல்பாடுகள் மந்த கதியில்!

## பொலிஸ் அதிகாரத்தை மாகாணத்துக்கு வழங்கக் கோருகின்றார் சிறிதரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 27

**யாழ். மாவட்டத்தில் பொலிஸாரின் செயல்பாடுகள் மந்தகதியில் இடம்பெறுவதை அவதானிக்க முடிகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.**

**இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அல்லாதுவிட்டால் பொலிஸ் அதிகாரத்தை மாகாணத்திடம் தாருங்கள் எனவும் அவர் கோரினார்.**



நேற்று இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சட்ட விரோத மணல் கடத்தல் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அண்மைய நாட்களில் பொலிஸாரின் செயற்பாட்டை பார்க்கும்போது எதற்கு எடுத்தாலும் இராணுவத்தினரை பயன்படுத்தவேண்டும் எனக் கூறுகின்றார்கள்.

குறிப்பாக யாழ். மாவட்டத்தில்

11

## ரணிலுக்கு தொடர்ந்தும் ஆதரவா? பட்ஜெட்டுக்கு பின்னர் தீர்மானம்

### கூடி ஆராய்ந்தது பொதுஜன பெரமுன

கொழும்பு, ஒக். 27

அரசாங்கத்தை முன்னோக்கி கொண்டு செல்ல ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதா? இல்லையா? என்பதை தீர்மானிப்பது குறித்து பொதுஜன பெரமுன ஆலோசனை நடத்தியுள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன் மொழிவின் பின்னர், இது தொடர்பில் தீர்மானத்தை எடுப்பது குறித்தும் அக்கட்சி

11

## நாமல் தனது தலையை பரிசோதிக்கவேண்டும்

### கடுமையாக சாடிய நிமல் லான்சா

கொழும்பு, ஒக். 27

“கோட்டாபய அமைச்சரவையை நான்கு தடவைகள் மாற்றியமைத்த போது நாமல் ராஜபக்ஷ கேள்வி கேட்க தைரியம் இல்லாமல் மிகவும் அமைதியாக இருந்தார்.”

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசமும்,

11

## முடிந்தால் பட்ஜெட்டுக்கு எதிராக வாக்களியுங்கள்

### நாமலுக்கு சஜித் சவால்

கொழும்பு, ஒக். 27

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விமர்சிக்கும் நாமல் ராஜபக்ஷ முடிந்தால் வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்து காட்டட்டும்.” - என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச சவால் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

11

## மக்களின் தேவைகளுக்கே முன்னுரிமை!

### அதிகாரிகளுக்கு டக்ளஸ் இடித்துரைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 27

நெடுந்தீவு மக்களின் போக்குவரத்திற்கே முன்னுரிமை அளிப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறிகட்டுவான் இறங்குதுறையில் நெடுந்தீவிற்கான பயணிகள் போக்குவரத்திற்கு எந்தவித மான இடையூறுகளும்

11



## மேய்ச்சல் காணியை விடுவிக்கக் கோரி மன்னாரில் மக்கள் நேற்றுப் போராட்டம்

மன்னார், ஒக். 27

நானாட்டான் - முசலி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் மேய்ச்சல் நில காணியை விடுவிக்கக்கோரி கவனயீர்ப்புப் போராட்டமொன்று மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கட்டுக்கரைக் குளத்திற்குட்பட்ட புல்ல றுத்தான் கண்டல் மேய்ச்சல்

11



## இப்படியும் நடக்கிறது

நேற்றைய இந்தப் பத்தியில் நாமல் ராஜபக்ஷ எம்.பி., ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரிவித்திருந்த ஆலோசனை பற்றி குறிப்பிட்டிருந்தேன். நேற்றைய தினம் அந்தப் பத்தியை படிக்காதவர்களுக்காக அதனை மீண்டும் தருவது நல்லது என்று நினைக்கின்றேன்.

'ஜனாதிபதி கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு கட்சிகள் மத்தியில் அமைதியை பேணவேண்டும். எதிர்காலத்தில் தீர்மானங்களை எடுக்கும்போது ஜனாதிபதி கூட்டணி கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என அவருக்கு ஆலோசனை வழங்குவதாக நாமல் ராஜபக்ஷ எம்.பி. குறிப்பிட்டார்.'

நாமல் எதற்காக கோபமடைந்திருந்தார் என்பது தெரிந்ததுதான். அண்மையில் அமைச்சரவையில் சில மாற்றங்களை ஜனாதிபதி செய்திருந்ததும், அந்த மாற்றங்களின் போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த இருவருக்கு முக்கிய அமைச்சுக்களை மேலதிகமாக வழங்கியிருந்ததுமே நாமலின் இந்தக் கோபத்துக்கு காரணம் என்பதையும் அந்தப் பத்தியில் தெரிவித்திருந்தேன்.

இது தொடர்பாக மேலும் சில தகவல்களை அறிய தெற்கில் சில ஊடக நண்பர்களுடன் பேசியபோது கிடைத்த தகவல்கள் சிலவற்றை இன்று பார்க்கவிருக்கிறோம்.

நீண்ட காலமாகவே பொதுஜன பெரமுனவில் பல்வேறு அணிகள் இருந்தாலும், அதில் நாமல் தலைமையில் இயங்கும் அணியினர், அரச தரப்பில் இல்லாமல் எதிரணியில் சென்று அமரவேண்டும் என்று விருப்பம் கொண்டிருப்பது தெரிந்த சங்கதிதான். இவ்வாறு எதிரணியில் இருக்க விரும்பினாலும் அமைச்சரவை மாற்றம் ஏதேனும் நடந்தால் தமக்கும் சந்தர்ப்பம் கிடைக்கலாம் என்ற எண்ணத்தில் அதில் ஆர்வம் காட்டாமல் சிலர் இருந்து வந்தனர்.

ஆனால் கடைசியாக நடந்த அமைச்சரவை மாற்றத்திலும் தமக்கு சந்தர்ப்பம் கிடைக்காததால், இனியும் காத்திருப்பது பயனற்றது என்ற நிலையிலேயே எதிரணியில் இருப்பதாவது, அரசியல் எதிர்காலத்திற்கு நல்லது என்று தீர்மானித்திருந்தனராம்.

இந்த மாதம் தாக்கல் செய்யப்படவிருக்கும் வரவு - செலவுத்திட்டத்தின் வாக்களிப்பின்போது எதிர்த்து வாக்களித்து விட்டு, எதிரணியில் சென்று அமர்வது என்ற யோசனையில் அவர்கள் இருந்ததாகவும், இதனை அறிந்த ஜனாதிபதி ரணில், தாராளமாக எதிர்த்து வாக்களிக்கலாம் என்றும், அவ்வாறு செய்தால் வரவு - செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டதும், அரசாங்கம் பதவியை இழக்கவேண்டிவரும் என்பதும், அப்படி நடக்கின்ற போது, அடுத்த மூன்று மாதங்களுக்கு பாராளுமன்றத்தை ஒத்திவைத்துவிட்டு, பாராளுமன்றத்தைக் கலக்க தான் தயங்கப்போவதில்லை என்றும் தகவல் அனுப்பினாராம்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டால், அதன் பின்னர் நடக்கும் தேர்தலில் தாம் வெற்றி பெறுவது நடக்கக்கூடிய காரியம் அல்ல என்பதைத் தெரிந்து வைத்திருக்கும் புதுமுக எம்.பிக்கள் பலர், ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து பதவியில் இல்லாமல் போனால் கிடைக்கவிருக்கும் ஓய்வூதியமும் கிடைக்காமல் போய்விடும் என்பதால், வரவு - செலவுத்திட்டத்தை எதிர்ப்பதில்லை என்று முடிவெடுத்திருக்கின்றனராம்.

இதனால் தனது முயற்சி தோல்வியில் முடிந்த மனவேதனையிலேயே நாமல் எம்.பி. விழுந்தும் மீசையில் மண் படவில்லை என்ற தொனியில், ரணிலுக்கு ஆலோசனை சொல்லி திருப்திப்பட்டுக் கொண்டார் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

ரணில்தான் இப்படி பயமுறுத்தி தனது காரியங்களை நகர்த்திச் செல்கிறார் என்றால், பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்து ரணில் ஆதரவு குழுவாக செயற்பட்டுக்கொண்டிருக்கும் நிமல் லான்சா குழுவினரும், அண்மையில் பெரமுனவின் 'தலை'யுடன் நேருக்குநேர் வாக்குவாதப்பட்டதாகவும் தெற்கு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பெரமுனவின் அந்த குழுவினர், பெரமுனவின் எந்தவொரு அரசியல் நடவடிக்கையிலும் கலந்து கொள்ளாமல், வெறுமனே ரணில் ஆதரவு அரசியல் பணிகளையே செய்து வருவது குறித்து நிமல் லான்சாவிடம் கடிந்துகொண்டபோது, அவரும் போதாக்குறைக்கு அப்படியெனில் பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் ஒன்றுக்கு செல்வோம், மக்கள் யார் செய்வது சரி என்று சொல்கிறார்கள் என்று பார்ப்போம் என்று சவால் விட்டிருக்கிறாராம்.

கையில் பலம் இருந்தும் (எம்.பிக்கள்) ரணில் எதைச்செய்தாலும் பார்த்துக்கொண்டு அமைதியாக காலத்தைக் கடத்த வேண்டியிருக்கிறதே என்று வேதனைப்பட்டாராம் பெரமுனவின் முக்கிய தலைவர் ஒருவர்.!

-ஊர்க்குருவி.

## ஜப்பானிடமிருந்து இலங்கைக்கு 200 மில்லியன் யென் நிதி உதவி

கொழும்பு, ஒக். 27

இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீன்பிடி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ஜப்பான் 200 மில்லியன் யென் உதவித்தொகை வழங்க தீர்மானித்துள்ளது.

மீன்பிடி மற்றும் நீரியல் வளத் திணைக்களத்திற்கு குளிரூட்டி வசதிகளுடன் கூடிய உழவு இயந்திரங்கள், இலங்கை மீன்பிடி துறைமுகக் கூட்டுத்தாபனத்திற்கு ஐஸ் உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் டிஜிட்டல் அளவீட்டு இயந்திரங்கள், தேசிய நீர்வாழ் வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு வலைகளையும் வழங்க ஜப்பான் திட்டமிட்டுள்ளது.

இதற்கான ஆவணங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையொப்பமிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

## குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பாதுகாப்புக்கு மேலதிக அதிரடிப்படை

கொழும்பு, ஒக். 27

குற்றப்புலனாய்வு திணைக்களத்தில், பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இதனைத் தெரிவித்தார்.

ஹரக் கட்டா எனப்படும் நதுன் சிந்தக மற்றும் குடு சலிந்து ஆகியோரை காப்பாற்ற முன்னெடுக்கப்படும் திட்டங்கள் தொடர்பான தகவல்கள் வெளியானதை அடுத்து இந்த பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக முன்னர் பொலிஸ் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த சிலரே ஈடுபடுத்தப்பட்டிருந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தாக்குதல் திட்டம் ஒன்றை தயாரித்து குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் இருந்து வெளியேற தயாராகவுள்ளதாக தகவல் வெளியான ஹரக் கட்டா மற்றும் குடு சலிந்து ஆகியோர் தாக்கல் செய்துள்ள மனுக்களை உடனடியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்துள்ளார்.



தங்களது உயிருக்கு உத்தரவாதம் வழங்குமாறு கோரி குறித்த இருவரும் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

இதேவேளை, குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள போதைப்பொருள் வர்த்தகர்களான ஹரக் கட்டா மற்றும் குடு சலிந்து ஆகியோரை காப்பாற்றுவதற்கான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத்திடம் அறியப்படுத்தப்பட்டது.

அவர்களை காப்பாற்றுவதற்காக கொமாண்டோ பாணியில் பயங்கரவாத தாக்குதல் நடத்தும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத்திடம் அறியப்படுத்தப்பட்டுள்ளது.

கொமாண்டோ படையணியைச் சேர்ந்த முன்னாள் இரண்டு உறுப்பினர்கள் கைதானதை அடுத்து இந்த தகவல் வெளியானது. (அ)

## மில்கோ ஊழியர்களுக்கு பிணை

கொழும்பு, ஒக். 27

மில்கோ நிறுவனத்தின் தலைவரை பணயக் கைதியாக வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான குறித்த நிறுவனத்தின் ஊழியர்கள் 13 பேரையும் தலா 500,000 ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்க கொழும்பு, கோட்டை நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

ஊழியர் நலன்கள் தொடர்பான பிரச்சினையின் காரணமாக மில்கோ நிறுவனத்தின் தலைவர் ரேணுக பெரேராவை குறித்த 13பேரும் பணயக் கைதியாக வைத்திருந்தனர்.

பின்னர், பொலிஸாரின் தலையீட்டைத் தொடர்ந்து ரேணுக பெரேரா விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும், இந்த சம்பவம் தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸார் மில்கோ நிறுவனத்தின் 13 ஊழியர்களை நேற்றிரவு கைது செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## கோண்டாவிலில் இன்று வருடாந்த சித்திர ஆக்கக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஒக.27

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீஅற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும் குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் ஆதரவில் நடத்தப்படும் குட்டிச்சுட்டி முன்பள்ளி, அகம் குழந்தைகள் பகல் நேரக் காப்பக மாணவர்களின் வருடாந்த சித்திர ஆக்க கண்காட்சி - 2023 நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மேற்படி முன்பள்ளியின் பிரதான மண்டபத்தில் நிலையத் தலைவர் து.சுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ். கோண்டாவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர் கணபதிப்பிள்ளை நித்தியானந்தன் பிரதம விருந்தினராகவும், ஓய்வுநிலை அதிபர் கணிதச்சுடர் சண் வாமதேவன், ஊடகவியலாளர் செல்வநாயகம் ரவிசாந் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## குளத்திலிருந்து மீட்கப்பட்ட சமுர்த்தி அலுவலரின் சடலம்

மட்டக்களப்பு, ஒக். 27

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெல்லாவெளி - பொறுகாமம் பகுதியிலுள்ள குளமொன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவின் பொறுகாமம் பகுதியிலுள்ள குளக்கரையை அண்டிய நீர்ப்பகுதியிலிருந்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பெரியகல்லாறு பகுதியைச் சேர்ந்த சமுர்த்தி உத்தியோகத்தரான கிருபைராஜா நிலக்சன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிராம மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் கிராம சேவகர், களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பொலிஸ் உத்தியோகத்தர்கள் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.



தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்ற நீதிபதி குளத்திலிருந்து சடலத்தை மீட்டு, பிரேத பரிசோதனைகளை முன்னெடுக்க உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu
27.10.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், ஐப்பசி 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# தலைமைப் பிரச்னை

சம்பந்தன் பதவி விலக வேண்டுமென்னும் கோரிக்கை பொதுவெளியில் முன்வைக்கப்பட்டிருக்கும் நிலையில் பிறிதொரு விடயம் முக்கியம் பெறுகின்றது. சம்பந்தன் தற்போது இயலாத நிலையிருந்தாலும், குறிப்பிட்ட காலம், அனைத்து கட்சிகளையும் ஏதோவொரு வகையில் வழிநடத்தும் தலைமை பொறுப்பை ஏற்றிருந்தார். சம்பந்தனதும், அவரது தலைமையிலான இலங்கை தமிழரசுக் கட்சியினதும் செயல்பாடுகளில், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் கடும் அதிருப்தியை கொண்டிருந்தாலும் கூட, ஏதேவொரு வகையில் சம்பந்தனுடன் ஒத்துழைத்திருந்தனர். இதன் காரணமாகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு பலவாறான உள்முரண்பாடுகளின் மத்தியிலும் உடையாமல் தொடர்ந்தது. சம்பந்தனை தவிர்த்துச் செல்வது அன்றைய சூழலில் ஒரு விசப் பரீட்சையாகவும் நோக்கப்பட்டது, மறுபுறம், சம்பந்தன்தான் இலங்கை தமிழரசுக் கட்சியின் பலமாகவும் இருந்தார்.

ஆனால் சம்பந்தன் தளர்வடையத் தொடங்கியதை தொடர்ந்து கூட்டமைப்பாக தொடரும் நிலைமையும் வீழ்ச்சியுறுத் தொடங்கியது. சம்பந்தனை மேவியும் தீர்மானங்களை எடுக்கக் கூடிய நிலைமை ஏற்பட்ட சூழலிலேயே, கூட்டமைப்பும் உடைவுற்றது. உள்ளூராட்சித் தேர்தலை காரணம் காட்டி, தமிழரசுக் கட்சி தனியான போட்டியிடும் முடிவை அறிவித்தது. ஒரு வேளை சம்பந்தன் தீர்மானிக்கக் கூடிய இடத்திலிருந்திருந்தால், அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டிருக்கவும் வாய்ப்பில்லாமல் போயிருக்கலாம்.

தற்போது நிலைமைகள் முற்றிலும் மாற்றமடைந்திருக்கின்றன. சம்பந்தனுக்கு பின்னர் யாரென்னும் கேள்வியுடன் தமிழ் தேசிய அரசியல் நகர்கின்றது. உண்மையில், தமிழ் தேசிய அரசியலை ஒரு தனியாளுமைக்குள் கட்டிப்போடும் காலம் முடிவுற்றுவிட்டது. சம்பந்தன்தான் இறுதி தனிநபர் தலைமை. இனி அவ்வாறானதொரு தலைமை அண்மைக்காலத்தில் வெளிவருவதற்கான எந்தவொரு வாய்ப்பும் இல்லை. ஏனெனில் வடக்கு – கிழக்கு மாகாணங்களை, அரசியல் ரீதியில் பிளவின்றி ஒன்றிணைத்து, வழிநடத்தக் கூடிய தனித் தலைமையொன்று தற்போதில்லை. தற்போதுள்ள எந்தவொரு கட்சியிலும் அவ்வாறான தகுதியுள்ள நபர் இல்லை. இருக்கும் அனைவரும் ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில், குறிப்பிட்ட மக்கள் மத்தியில் வாக்குகளை பெறக் கூடிய நிலையிருப்பவர்கள்தான். அவ்வாறானவர்களால் தமிழ் மக்களின் தலைமையாக மேல்வர முடியாது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ் மக்களின் அரசியல் நிலைமை மேலும் மோசமடையப் போகின்றது. தமிழ் மக்களின் சார்பில் கொழும்புடன் பேசக் கூடிய முழுத் தகுதிநிலையுடன் எந்தவொரு கட்சியும் இருக்கப் போவதில்லை. இந்த நிலைமை தென்னிலங்கை அரசியலுக்கு மேலும் சாதகமான அம்சமாகும். தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு முயற்சியை மேலும் தட்டிக்கழிக்க நினைத்தால், இதனை தென்னிலங்கையின் ஆட்சியாளர்கள் சிறப்பாக பயன்படுத்திக்கொள்ள முடியும்.

இது ஒரு தலையாய அரசியல் பிரச்னை. இதனைக் கருத்தில் கொண்டே, தமிழ் தேசிய கட்சிகள் தங்களின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை திட்டமிட வேண்டும். பெருமளவிற்கு ஓரணியாக தேர்தலை எதிர்கொள்ளும் வியூகங்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டும். இல்லாவிட்டால் சிதறிய அரசியல் அணிகளே இருக்கும். தமிழர் அரசியல் சிதறுவது எப்போதுமே, தென்னிலங்கைக்கே நன்மையானது.

# ஜனாதிபதித் தேர்தல் வரை மட்டுமே ரணிலுக்கு ஆதரவு

## கூறுகிறது பொதுஜன பெரமுன



கொழும்பு, ஒக். 27

2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் வரை மாத்திரமே பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

ஜனாதிபதித் தேர்தலில் நாட்டின் தலைவர் யார் என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள்.

நாட்டில் நிலவிய ஸ்திரமற்ற நிலையைக் கட்டுப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாய்ப்பு கிடைத்தது. அதனைச் சரியாகச் செய்த அவருக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நாட்டு மக்களுக்கு எவ்வாறு நிவாரணத்தை வழங்குவது தொடர்பில் கட்சி என்ற ரீதியில் அவதானம் செலுத்தியுள்ளோம்.

சர்வதேச நாணய நிதியமே நாட்டில் அனைத்தையும் தீர்மானிக்குமானால் நாட்டு மக்களில் பாதி பேர் உயிரிழந்து விடுவார்கள். மக்களை கொன்றுவிட்டு, கடன் பெற்று பயனில்லை- என்றார். (அ)

# சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு




கொழும்பு, ஒக். 27

இந்த மாதத்தின் முதல் மூன்று வாரங்களில் 77ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை யினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த மாதம் 77 ஆயிரத்து 763 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த மாதத்தில் 20,369 இந்திய பிரஜைகள் நாட் டுக்கு வருகைத்தந்துள்ளனர்.

இந்தியாவில் இருந்து வரும் சுற்றுலாப் பயணி களின் எண்ணிக்கை தற் போது அதிகரித்து வருவ தாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, ரஷ்யாவில் இருந்து 7 ஆயிரத்து 89 சுற்றுலாப் பயணிகளும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 6 ஆயிரத்து 287 சுற்றுலாப்பயணிகளும், ஜேர்மனியில் இருந்து 4 ஆயிரத்து 923 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகைத்தந்துள்ளனர்.(அ)

## பெருந்தொகை நெல் காணாமல்போனமை

# 4 களஞ்சியசாலை காப்பாளர்கள் சேவையிலிருந்து இடைநிறுத்தம்

கொழும்பு, ஒக். 27

நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியசாலைகளில் இருந்த நெல் தொகை திருடப்பட்டமை தொடர்பில் 04 களஞ்சியசாலை காப்பாளர்கள் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

நிக்கவெரட்டிய, மஹவ மற்றும் ஆனமடுவ ஆகிய பிரதேசங்களில் உள்ள நெல் களஞ்சியசாலைகளின் காப்பாளர்கள் நால்வரே சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள தாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் புத்திக இத்தமல்கொட தெரிவித்தார்.

நெல் களஞ்சியசாலைகளில் இருந்து 700 இலட்சம் ரூபா பெறுமதியான நெல் கையிருப்பு காணாமல் போயுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் கூறினார்.

மொத்த கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக போலியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், நெல் சந்தைப்படுத்தல் சபையினால் குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**ஒக்ரோபர் - 27 வெள்ளிக்கிழமை**
சோபகிருது வருடம் - ஐப்பசி 10
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சதுர்த்தசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**இடபம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். எண்ணங்கள் நிறைவேறும் நாள்.

**மிதுனம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். சாதித்துக் காட்டும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். வியாபாரத்தில் தள்ளிப்போன வாய்ப்புகள் தேடி வரும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**கன்னி**
கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். சக ஊழியர்களால் ஆதாயமும் உண்டு.

**துலாம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பழைய சிக்கல்கள் தீரும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். யோகம் கிட்டும்.

**விருட்சிகம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை மாற்றுவீர்கள். சக ஊழியர்கள் உதவுவார்கள். எதிலும் தெளிவு பிறக்கும்.

**தனுசு**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். சகோதரி உதவுவார். வியாபாரம் தழைக்கும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நன்மை கிட்டும் நாள்.

**மகரம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். தோற்றப் பொலிவுக் கூடும். புது நட்பு மலரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். மரியாதை கூடும். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. சிறுசிறு அவமானம் ஏற்படும். அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். வளைந்து கொடுக்க வேண்டிய நாள்.

# தமிழகத்தில் ஆளுநருக்கே பாதுகாப்பில்லை!

## அரசியல் தலைவர்கள் கண்டனம்

**சென்னை, ஒக். 27**

**தமிழக ஆளுநர் மாளிகை நுழைவுவாயில் பகுதியில் பெற்றோல் குண்டு வீசப்பட்ட சம்பவத்துக்கு தெலங்கானா ஆளுநர் தமிழிசை மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.**

**இது தொடர்பாக அவர்கள் கூறியிருப்பதாவது:**



தெலங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன்:

தமிழக ஆளுநருக்கு எதிராக வார்த்தைவன்முறைகளும், செயல் வன்முறைகளும் அண்மை காலமாகஅதிகமாக ஆளுங்கட்சி ஆதரவாளர்களால் ஊக்கப்படுத்துவது கவலை அளிக்கிறது. இது ஜனநாயகத்துக்கு ஏற்புடையது அல்ல. கருத்தை கருத்தால் எதிர்கொள்ள வேண்டுமே தவிர கலவரத்தால் அல்ல. மேலும் ஆளுநரின் மாண்பும், ஆளுநர் மாளிகையின் மாண்பும் காக்கப்பட வேண்டும், தாக்கப்படக் கூடாது என்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி:

குடியரசுத் தலைவர், ஆளுநர் மாளிகைக்கு வரவுள்ள நிலையில், அடிப்படை பாதுகாப்புக்கே குந்தகமான செயல்கள் நடந்திருப்பது, தமிழக உளவுத் துறையும், காவல்துறையும் திமுக ஆட்சியில் மொத்தமாக செயல் இழந்து விட்டதையே வெளிக்காட்டுகிறது. தமிழகம் பாதுகாப்பற்ற மாநிலங்கள் பட்டியலில் சேர்ந்து விட்டதோ என்ற அச்சமும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. மேலும் குண்டு வீசி பிடிபட்ட நபர் 2 நாட்கள் முன்னர்தான் சிறையில் இருந்து வெளிவந்தவர் என்பது தெரிய வந்துள்ளது. அப்படியானால் ஆளுநர் மாளிகை குண்டுவீச்சுக்கான திட்டம் சிறையிலேயே திட்டமிடப்பட்டதா என்ற சந்தேகமும், இதற்கு பின் மிகப் பெரிய சதிவலை பின்னப்பட்டிருப்பதும் உறுதியாகிறது.

மத்திய இணையமைச்சர் எல்.முருகன்: மாநில அரசமைப்பின் உச்சபட்ச அதிகாரம் படைத்த ஆளுநர் இருக்கும் மாளிகை மீது பெட்ரோல் குண்டு வீசப்படுகிறது. ஆளுநருக்கே பாதுகாப்பில்லாத நிலை இருக்கிறது. இதற்கு காரணமான நபர் ஏற்கெனவே தமிழக பாஜக தலைமையகத்தில் பெட்ரோல் குண்டு வீசியிருந்தார். அப்போதே உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் ஆளுநர் மாளிகை மீது பெட்ரோல் குண்டு வீசிய சம்பவம் நடந்திருக்காது.

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம்:

திமுக ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்தே சட்டம் ஒழுங்கை சீர்குலைப்போரின் ஆதிக்கம் கொடி கட்டி பறக்க ஆரம்பித்து விட்டது. ஆளுநர் மாளிகை மீதே பெட்ரோல் குண்டு வீசும் துணிச்சல் ரவுடிகளுக்கு வந்திருக்கிறது என்றால், வன்முறையாளர்கள் மீதுதிமுக அரசு மெத்தன போக்கை கடைப்பிடிப்பது தான் காரணம் என்றால் மிகையாகாது.

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை:

முக்கியத்துவமில்லாத விஷயங்கள் மீது மக்களின் கவனத்தை திசை திருப்புவதில் திமுக அரசு மும்முரமாக இருக்கும் வேளையில், குற்றவாளிகள் வீதிகளில் இறங்கியுள்ளனர். தொடர்ச்சியாக தாக்குதல்கள் நடத்தப்படுவதால், திமுக அரசே தாக்குதல்களுக்கு காரணமாக இருக்குமோ என்ற எண்ணத்தை உருவாக்குகிறது. ஆனால் நமது முதல்வரோ தற்போது செய்து வருவதைப் போலவே இந்தச் சம்பவத்தில் இருந்தும் மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்கான ஏற்பாட்டை செய்து கொண்டிருப்பார்.

தமாகா தலைவர் ஜி.கே. வாசன்: ஆளுநர் மாளிகை மீது பெட்ரோல் குண்டு வீசிய நபர் மீது உரிய விசாரணை நடத்தி, உண்மை நோக்கத்தை வெளிக் கொண்டு வர வேண்டும். ஆளுநர் மாளிகைக்கு உரிய பாதுகாப்பை அரசு உறுதி செய்ய வேண்டும்.

இதேபோல், பாஜக மேலிட இணை பொறுப்பாளர் சுதாகர் ரெட்டி, தமுமுக தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா, வி.கே.சசிகலா, பெருந்தலைவர் மக்கள் கட்சித் தலைவர் என்.ஆர்.தனபாலன் உள்ளிட்டோரும் கண்டனம் தெரிவித்துள்ளனர். (அ)

# திராவிடர் குறித்த ஆளுநர் கருத்து; நழுவி ஓடிய எடப்பாடி பழனிசாமி

சென்னை, ஒக். 27

இந்தியாவில் ஆரியம், திராவிடம் ஆகிய இனங்களே கிடையாது என்று தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி கூறியது தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விக்கு, அ.தி.மு.க பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேரடியாக பதில் கொடுக்காமல் மழுப்பி மழுப்பி பேசியது அக்கட்சியினரையே அதிருப்தியில் ஆழ்த்தியுள்ளது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று பெயரிலேயே திராவிடத்தை வைத்திருக்கும் கட்சியின் தலைவர், எதற்காக இப்படி பயப்பட வேண்டும் என பலரும் கேள்வியெழுப்பி வருகின்றனர்.

திருச்சியில் நடைபெற்ற மருது சகோதரர்கள் நினைவு நாள் நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி பங்கேற்று பேசினார். அப்போது அவர், “தமிழகத்தின் உண்மையான வரலாற்றை அழிப்பதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திராவிடம், ஆரியம் என இருவேறு இனங்கள் இங்கு இருப்பது போன்ற ஒரு தோற்றத்தை ஆங்கிலேயர்கள் உருவாக்கினார்கள். ஆனால், உண்மையில் ஆரியம், திராவிடம் ஆகிய இனங்களே கிடையாது” என ஆளுநர் ரவி தெரிவித்தார்.

ஆளுநரின் இந்த பேச்சுக்கு திமுக உள்ளிட்ட கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன. ஆரியர்கள், திராவிடர்கள் என்ற இனக் குழுக்கள் இருப்பதை பல வரலாற்று ஆசிரியர்களே உறுதிப் படுத்தி இருக்கிறார்கள் என்றும், பாஜக தூக்கிப் பிடிக்கும் மனுதர்மமே திராவிடர், ஆரியர் இனங்களை குறிப்பிட்டு இருக்கிறது எனவும் அவை தெரிவித்தன.

திமுகவும், கூட்டணிக் கட்சிகளும் இப்படி எதிர்வினை யாற்றி வரும் சூழலில், அதிமுகவோ இதுபற்றி எதுவும் பேசாமல் இருந்தது. இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து சேலத்தில் எடப்பாடி பழனிசாமியிடம் செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர். இந்தக் கேள்வியை கேட்டதுமே சற்று உசாரான எடப்பாடி பழனிசாமி, “இங்க பாருங்க.. இதை பத்தி பேசணும்னா புராணம் படிக்கணும். நான் அந்த அளவுக்கு படிச்சவன் கிடையாது. பெரிய ஆய்வு பண்ணி பேச வேண்டிய விஷயம் இது. ஆளுநர் அப்படி சொன்னார்னா நீங்க அவரிடம் தான் போய் கேக்கணும். என்னட்ட வந்து கேட்டீங்கனா எனக்கு என்ன தெரியும்? வரலாற்று அறிஞர்களிடம் கேட்க வேண்டிய கேள்வி இது” என மழுப்பிவிட்டுச் சென்றார்.

தற்போது ஆளுநர் ரவி கூறியதை விட எடப்பாடி பழனிசாமி மழுப்பியது தான் பெரும் விவாதத்திற்கும், விமர்சனத்திற்கும் வித்திட்டுள்ளது. (அ)

# கட்டுப்பாட்டு விலையை மீறினால் நிச்சயம் அரிசி இறக்குமதியாகும்!

## வர்த்தக அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 27

**நிர்ணய விலைக்கு அதிகமாக அரிசி விற்பனை செய்யப்படும் பட்சத்தில், அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் அமைச்சரவை உபகுழு கூடிய போது, இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

சம்பா உள்ளிட்ட பல அரிசி வகைகள் இவ்வாறு நிர்ணய விலைக்கு அதிகமாக விற்பனை செய்யப்படுவதாக முறைப்பாடு கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

சம்பா அரிசி 230 ரூபாவிற்கும் நாட்டரிசி 220 ரூபாவிற்கும் கீரி சம்பா 260 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்பட வேண்டுமென நிர்ணய விலை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களை கண்டறியும் நோக்கில் நேற்று முதல் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் நளின் பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார். (அ)

# வருடாந்தம் 150 பாடசாலை மாணவரை உயிர்களை பலியெடுக்கும் விபத்துக்கள்!

கொழும்பு, ஒக். 27

நாட்டில் வருடாந்தம் சுமார் 150 பாடசாலை மாணவர்கள் வீதி விபத்துகளில் பலியாகின்றனர் என பொலிஸ் போக்குவரத்து பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போக்குவரத்து பொலிஸாரின் தரவுகளின்படி, பிரதான வீதிகளில் ஏற்படும் வாகன விபத்துகளில் தினமும் 6 பேர் உயிரிழக்கின்றனர் என தெரிய வந்துள்ளது.

இதன்படி, ஒவ்வொரு 4 மணியத்தியாலங்களுக்கும் ஒருவர் உயிரிழக்கின்றார்.

கவனக்குறைவாக வாகனம் செலுத்துவதனாலேயே இந்த விபத்துகள் அதிகம் ஏற்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்த ஆண்டு ஒக்ரோபர் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துகளில் ஆயிரத்து 800 பேர் உயிரிழந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதில் 18 வயதுக்குட்பட்ட 115 சிறுவர்கள் வீதி விபத்துக்களில் உயிரிழந்துள்ளதாக போக்குவரத்து பொலிஸாரின் தரவுகள் மேலும் தெரிவிக்கின்றன. (அ)

# பட்ஜெட் முன்வைக்கப்பட்ட கையோடு ரணிலைச் சந்திக்க பெரமுன திட்டம்!

கொழும்பு, ஒக். 27

நாட்டை முன்னேற்றுவதற்காக 2048 ஆம் ஆண்டுவரை காத்திருக்க முடியாது. எனவே, ஜனாதிபதியால் முன்வைக்கப்படும் பாதீடு எவ்வாறு அமையும் என்பதற்காக காத்திருக்கின்றோம். பாதீடு முன்வைக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதியை சந்தித்து பேச்சு நடத்தி முடிவொன்று எடுக்கப்படும் என்று பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டுக்காக தனது அரசியல் எதிரியைக்கூட தலைவராக்கிய நபர்தான் மகிந்த ராஜபக்ஷ எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் நாமல் மேலும் கூறியவை வருமாறு,

மகிந்த ராஜபக்ஷவுக்கு 55 வருடகால அரசியலில் அனுபவம் உள்ளது. அரசியலில் பல சம்பவங்களை அவர் கண்டுள்ளார். அவர் அங்கம் வகித்த கட்சி (சு.க.) 8 ஆசனங்களுக்கு விழுந்த நிலையையும் எதிர்கொண்டார். அதேபோல ஒன்றாக இருந்து அப்பம் சாப்பிட்டுவிட்டு, மறுநாள் சென்றவர்கள் (மைத்திரி) குறித்த அனுபவமும் அவருக்கு உள்ளது . தனது சகோதரனை ஜனாதிபதி ஆக்கினார். ஆனால் அவர் மகிந்தவின் அரசியல் எண்ணப்பாடுகளில், எதிர்பார்ப்புகளில் இருந்து விலகிச் சென்றார். இந்த அனுபவமும் மகிந்தவுக்கு உள்ளது. அதேபோல தனது அரசியலில் 45 வருடகாலமாக எதிரியாக இருந்த (ரணில் விக்கிரமசிங்கவை நாட்டின் அரசியல் உறுதிப்பாட்டுக்காக தலைவர் ஆக்கிய அனுபவமும் மகிந்தவுக்கு உள்ளது.

ஜனாதிபதியை பாராளுமன்ற குழுவாக சந்திக்க திட்டமிட்டுள்ளோம். தமது பிள்ளைகளுக்கு சிறந்த உணவை வழங்க 2030 வரை மக்களுக்கு காத்திருக்க முடியாது. முன்னேற்றமடைந்த நாடாக நாட்டை கட்டியெழுப்ப 2048 வரை காத்திருக்க முடியாது. அப்படியானால் அரசு எதற்கு? எனவே, வரவு-செலவுத் திட்டத்தில் எவ்வாறான விடயங்களை ஜனாதிபதி முன்வைக்கின்றார் என்பதற்காக காத்திருக்கின்றோம்-என்றார். (அ)

# குழந்தைக்குப் பால் ஊட்டிய தாய் மீது கூட்டு வன்புணர்வு!

கொழும்பு, ஒக். 27

தனது குழந்தைக்கு பாலூட்டிக்கொண்டிருந்த இளம் தாயை இளைஞர்கள் மூவர் வன்புணர்ந்துள்ள சம்பவம் பூகொடை பிரதேசத்திலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

குழந்தையை அபகரித்த அந்த இளைஞர்கள் குழந்தையை தாக்கப்போவதாக அச்சுறுத்தி தாயை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக பூகொடை பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பேரில் 21 மற்றும் 23 வயதுடைய இளைஞர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குழந்தையின் தாய் வைத்தியசாலையில் பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தலைமறைவாக உள்ள மற்றுமொறு சந்தேக நபர் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (அ)

# தேசிய அடையாள அட்டைக்கான கட்டணத்தை திருத்த நடவடிக்கை!

கொழும்பு, ஒக். 27

தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கு அறவிடப்படும் கட்டணத்தை திருத்தியமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் பொது பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி,

அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு தொடர்பில் தேசிய தொழிற்சங்க நிலையம் விடுத்துள்ள அறிவித்தல் அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு தொடர்பில் தேசிய தொழிற்சங்க நிலையம் விடுத்துள்ள அறிவித்தல்கட்டணம்

"தேசிய அடையாள அட்டையின் சான்றளிக்கப்பட்ட பிரதிக்கான கட்டணம் 2,000 ரூபாவாக இருக்க வேண்டும்.

மேலும், தேசிய அடையாள அட்டைகளின் உண்மைத் தன்மையை சரிபார்ப்பதற்கான கட்டணம் ஒன்லைன் முறையில் சமர்பித்தால் 25 ரூபாவாகவும், பௌதீக ஆவணங்கள் மூலமா கவோ அல்லது ஆணையர் ஜெனரலுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய மின்னணு முறை மூலமாகவோ சமர்ப்பிக்கப்பட்டால் 500 ரூபாவாகவும் இருக்கும்.

மேலும், தேசிய அடையாள அட்டை புகைப்படக் கலைஞராக பதிவு செய்வதற்கான கட்டணம் 15,000 ரூபாவாக இருக்க வேண்டும் என பொது பாதுகாப்பு அமைச்சு கூறுகிறது.

இதற்கு முன், 10,000 ரூபாய் வசூலிக்கப்பட்டது. பதிவுச் சான்றிதழைப் புதுப்பிப்பதற்கான ஆண்டுக் கட்டணமான 2,000 ரூபாயை 3,000 ரூபாயாக உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது." என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# கிளிநொச்சியில் அகற்றப்படும் வீதியோர ஆபத்தான மரங்கள்!

கிளிநொச்சி, ஒக். 27

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆபத்தான மரங்களை அகற்றும் நடவக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி வட்டக்கச்சி பிரதான வீதியில் ஆபத்தான நிலையில் காணப்பட்ட மரம் ஆகற்றப்பட்டது.

கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஜீவராஜின் கோரிக்கைக்கு அமைவாக குறித்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த வீதி ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்துக்கான பிரதான மின் விநியோகம், பிரதேசத்துக்கான மின் விநியோகம் இடம்பெறுவதுடன், அதிக மக்கள் பயன்பாட்டு வீதியாகவும் அமைந்துள்ளது.

அரசாங்க மரக் கூட்டுத்தாபன கிளிநொச்சி உதவி பிரதேச முகாமையாளர், ஊழியர்கள், மின்சார சபை ஊழியர்கள், இடர்முகாமைத்துவப் பிரிவினர், கரைச்சி பிரதேச சபையினரும் முன்னிலையாகியிருந்த நிலையில் குறித்த மரம் அகற்றப்பட்டது.


கிளிநொச்சி நகரில் மேலும் 29 ஆபத்தான மரங்கள் மற்றும் கிளைகள் அகற்றுவதற்காக அடையாளப்படுத்தப்பட்டு அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளதாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினர் தெரிவித்துள்ளனர். (அ)

# சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரிப்பு!

கொழும்பு, ஒக். 27

கடந்த செப்ரெம்பர் மாதத்தில் மாத்திரம் 16 வயதிற்குட்பட்ட 168 சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளதாக, பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

அவர்களில் 22 சிறுமிகள் கர்ப்பமடைந்துள்ளதாகவும், அவர் குறிப்பிட்டார்.



சம்பந்தப்பட்டவர்களில் 90 வீதமானவர்கள் போதைப்பொருள் பாவனையாளர்கள் என கண்டறியப்பட்டுள்ளதாகவும், அதேநேரம் கர்ப்பமடைந்துள்ள சிறுமிகளில் 15 பேர் காதல் விவகாரத்தால் இந்நிலையை எதிர்நோக்கியுள்ளனர் எனவும் எஞ்சிய 7 சிறுமிகள் பலத்காரமாக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் கீதா குமாரசிங்க கூறினார்.

இவற்றை அனுமதிக்க முடியாது என தெரிவித்த இராஜாங்க அமைச்சர், சட்டத்தை கடுமையாக்கி இவற்றை தடுக்க வேண்டும் எனவும் கோரினார்.

# இலங்கைக்கு வருகிறது ஐரோப்பிய ஒன்றிய குழு

## ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை குறித்து ஆராய

கொழும்பு, ஒக். 27

**இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் மற்றும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை வழங்கல் குறித்து ஆராய்வதற்காக எதிர்வரும் 30 ஆம் திகதி நால்வர் அடங்கிய ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு இலங்கைக்கு வருகிறது.**

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை காலம் முடிவுக்கு வந்திருக்கும் நிலையில், அதனைத் தொடர்ந்து பெற்றுக்கொள்வதற்கு இலங்கை உள்ளிட்ட நாடுகள் மீண்டும் விண்ணப்பித்துள்ள நிலையில் முக்கிய நிபந்தனைகள் நிறை வேற்றப்பட்டனவா என பரிசீலிக்கப்பட்டு தீர்மானம் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கைக்கு ஏற்கனவே ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை வழங்கப்பட்டபோது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கவேண்டும் அல்லது சர்வதேச நியமங்களுக்கு அமைவாக அதனைத் திருத்தியமைக்க வேண்டும் என பிரதான நிபந்தனையாக முன் வைக்கப்பட்டது.

இருப்பினும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவரும் நிலையில் அச்சட்டமூலங்களின் உள்ளடக்கத் திற்கு கடுமையான எதிர்ப்புக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தில் பின்லாந்து, போலந்து, ஜேர்மனி மற்றும் லிதுவேனியாவை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்றக் குழுவினர் எதிர்வரும் 30 ஆம் திகதி நாட்டுக்கு வருகை தரவுள்ளனர்.

சுமார் ஒருவார காலம் நாட்டில் தங்கியிருப்பதற்குத் திட்டமிட்டிருக்கும் அவர்கள், அக்காலப்பகுதியில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். (அ)

# தென்கொரிய போர்க்கப்பல் கொழும்புத் துறைமுகத்தில்!



கொழும்பு, ஒக். 27

தென்கொரிய கடற்படைக்கு சொந்தமான போர்க்கப்பல் நேற்றுக் காலை கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டது.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான கொரிய தூதுவர் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

தென் கொரிய போர்க்கப்பல் ஒன்று 2017 ஒக்ரோபரில் நாட்டுக்கு வந்தது.

இந்தக் கப்பல் இந்தியா-பசிபிக் மூலோபாயத்தின் கீழ் தெற்காசிய பங்குதாரர்களுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் இலங்கைக்கு விஜயம் செய்வதாக தென் கொரிய கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த கப்பல் கொரிய கடற்படையின் கடற்கொள்ளை எதிர்ப்பு பிரிவுக்கு சொந்தமானது. இது கூட்டு பாதுகாப்பு, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் கொரிய மற்றும் பிற கப்பல்களின் பாதுகாப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. (அ)

# கடமைகளை நிறைவேற்றும்போது சட்டத்தரணிகளுக்கு அச்சுறுத்தல்!

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கவலை

கொழும்பு, ஒக். 27

தமது கடமைகளை நிறை வேற்றும்போது சட்டத்தரணிகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவது குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடும் கவலை வெளியிட்டுள்ளது.

உயிருக்கு அஞ்சாமல் தமது தொழில்சார் கடமைகளை நிறைவேற்றும் சுதந்திரம் சட்டத்தரணிகளுக்கு இருக்க வேண்டும் என அதன் தலைவர் கௌசல்ய நவரத்ன தெரிவித்தார்.

கடந்த 17ஆம் திகதி கலகெதர நீதவான் நீதிமன்றில் சந்தேகநபர் ஒருவரால் பெண் சட்டத்தரணி ஒருவர் தாக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவத்தைத் தொடர்ந்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பல சட்டத்தரணிகள் ஆஜராகி குறித்த பெண் சட்டத்தரணிக்கு நீதி வழங்கப்படுவதை உறுதிப்படுத்த உதவியதாக அவர் குறிப்பிட்டார்.

சட்டத்தரணிகள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது இன்றியமையாத ஒன்று என்றும் நீதிமன்றத்தின் கண்ணியம் மற்றும் அதிகாரமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் கௌசல்ய நவரத்ன கூறினார்.

# நவம்பர் மாதம் முதல் வாரத்திலிருந்து தொடர் தொழிற்சங்கப் போராட்டம்!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானம்

கொழும்பு, ஒக். 27

நவம்பர், முதல் வாரத்திலிருந்து தொடர் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

வெளிநாடு செல்ல எதிர்பார்த்திருக்கும் வைத்திய அதிகாரிகளை தக்கவைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், தொழிற்சங்கப் நடவடிக்கையை அறிவித்துள்ளது.

அதற்கிணங்க, எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் வி.ஐ.பி சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான நடமாடும் அம்புலன்ஸ் சேவைகளில் இருந்து மறு அறிவிப்பு வரும் வரை விலகவும், மருந்து வமனைகள் கடமைகளுக்கு வெளியே திட்டமிடப்பட்ட நடமாடும் கிளினிக்குகள் உட்பட தொடர்புடைய பிற கடமை நடவடிக்கைகளில் இருந்து மறு அறிவிப்பு வரும் வரை விலகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

அதேநேரம், முன்மொழியப்பட்ட தீர்வுகளை நடைமுறைப் படுத்துவதற்கு அதிகாரிகளின் போதிய பதிலைக் கொடுக்காததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், நவம்பர் மாதம் முதலாம் திகதிக்கு பின்னர் மாகாண அளவிலான தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. (அ)

# இலத்திரனியல் மயமாக்கப்படவுள்ள உள்ளூராட்சி மன்றக் கட்டண முறை!

கொழும்பு, ஒக். 27

அடுத்த வருடம் முதல் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஒன்லைன் முறையின் மூலம் பணம் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

பல உள்ளூராட்சி மன்றங்கள் இது தொடர்பான வேலைத் திட்டத்தை ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் உள்ளூராட்சி மன்றங்களின் வரி அறவீடு நடவடிக்கைகள் உள்ளிட்ட கொடுப்பனவுகளை மேற்கொள்வதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

அதன்படி, நாடளாவிய ரீதியில் உள்ள 341 உள்ளூராட்சி நிறுவனங்களிலும் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் உரிய வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜானக வக்கம்புர தெரிவித்தார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான அனைத்து வீதிகளின் வரைபடப் பணிகளை இவ்வருட இறுதிக்குள் நிறைவு செய்வதற்கு நம்பிக்கையுள்ளதாக ஜானக வக்கம்புர கூறினார். (அ)

# காலிக் கோட்டையை பார்வையிட கட்டணம்

## எதிர்ப்பு தெரிவிக்கும் மக்கள்

கொழும்பு, ஒக். 27

இலங்கையில் சுற்றுலா பயணிகளை அதிகம் கவர்ந்த காலி கோட்டையை பார்வையிடுவதற்கு கட்டணம் அறவிட காலி பாரம்பரிய அறக்கட்டளை மற்றும் மத்திய கலாசார நிதியம் என்பன தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, காலிக் கோட்டையை பார்வையிட பிரவேசிக்கும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளிடம் 15 அமெரிக்க டொலரும், சிறுவர்களிடம் 7 அமெரிக்க டொலரும் அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த தீர்மானத்திற்கு பிரதேச வாசிகள் கடும் விசனத்தை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கொழும்பு மாவட்டத்தில் 64 பாடசாலைகளில் அதிக உப்பு , சீனி கொண்ட உணவு விற்பனை

கொழும்பு, ஒக். 27

கொழும்பு மாவட்டத்தின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட 112 பாடசாலைகளில் 64 பாடசாலைகளில் காணப்படும் சிற்றுண்டிச்சாலைகளில் அதிக உப்பு மற்றும் சீனி கொண்ட உணவுகள் விற்பனை செய்யப்படுவதாக தெரியவந்துள்ளது.

கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி ருவன் விஜேமுனி இது தொடர்பில் தெரிவிக்கையில்-

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது அதே பிரதேசத்தில் காணப்படும் 76 பாடசாலைகள் இவ்வாறு இயங்கி வந்தன.

இதனடிப்படையில், அதிக உப்பு மற்றும் சீனி உணவுகளை விற்பனை செய்யும் அந்தந்த பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அதன் ஆபத்துகள் குறித்து விளக்கமளித்தோம்.

அத்துடன், எஞ்சியுள்ள 48 பாடசாலைகளில் இயங்கும் சிற்றுண்டிச்சாலைகளும் அடுத்த சில தினங்களில் பரிசோதிக்கப் படும்-என்றார். (அ)

# உயிரைப் பணயம் வைத்தே யாழில் வேலை செய்கிறோம்

## உதவி பொலிஸ் அத்தியட்சகர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக். 27

**பொலிஸ் வேலை என்பது சில்லறைக் கடை போன்றது. நிறைய பிரச்னைகளுக்கு முகம் கொடுக்கவேண்டி வரும். ஆகவே மணல் கடத்தல் விடயத்தை மாத்திரம் கண்காணித்துக் கொண்டிருக்க முடியாது. சாதாரண மக்கள் என்ன பிரச்னை என்றாலும் முதன்முதலாக நாடுவது பொலீஸ் நிலையத்தைத்தான். மக்களுக்கு நிறைய பிரச்னை உள்ளது. நாங்கள் உயிரைப் பணயம் வைத்துத்தான் பொலிஸ் கடமையைச் செய்கின்றோம் என யாழ்ப்பாண உதவி பொலிஸ் அத்தியட்சகர் யரூல் தெரிவித்தார்.**

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தல் தொடர்பில் ஆராயும் போது யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு பதிலளித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொலிஸார் பல்வேறுபட்ட பிரச்னைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும். அதாவது ஒரு திருடனை கைது செய்ய முயன்றால் அவன் ஒழித்திருப்பான் அல்லது வேறு எங்கேயாவது மறைத்திருப்பான். இப்படி பல சம்பவங்கள் உள்ளன. ஆனால் உயிரை துச்சம் என மதித்துத் தான் இந்த பொலிஸ் கடமையை செயற்படுத்துகிறோம்



பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்த கருத்து ஏற்கக்கூடிய கருத்து அல்ல. ஆளணிப் பற்றாக்குறை போன்ற பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் கடமையாற்றி வருகின்றோம். எனினும் யாழ். மாவட்டத்தில் பெருமளவு குற்றங்களை கட்டுப்படுத்தக்கூடியதாக உள்ளது.

நீங்கள் வேண்டுமென்றால் அறிக்கைகளை எடுத்துப் பாருங்கள். 75 வீதமான குற்றங்களைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றோம். ஆகவே பொலிஸார் மீது இவ்வாறான குற்றச்சாட்டுகளை சுமத்துவதை நீங்கள் நிறுத்த வேண்டும்-என்றார்.(அ)



# விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கிளிநொச்சி ம.வியில் விசேட வகுப்பறை

கிளிநொச்சி, ஒக். 27

கிளிநொச்சி தெற்கு வலயத்திற்கு உட்பட்ட கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கென நிர்மாணிக்கப்பட்ட பிரத்தியேக வகுப்பறை நேற்று திறக்கப்பட்டது.

விசேட தேவையுடைய மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் நோக்குடன் இந்த பிரத்தியேக வகுப்பறை திறக்கப்பட்டுள்ளது.

புதிய வகுப்பறையை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் வைத்தியர் ஜெயராஜ் திறந்து வைத்தார்.

அத்துடன் விசேட தேவையுடைய மாணவர்களுகளின் கற்றல் செயற்பாடுகளுக்காக 2 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் தொலைக்காட்சி ஒன்றும் கதிரைகளும் அன்பளிப்புச் செய்யபப்பட்டுள்ளன.

# குடமுருட்டிக்குளத்தின் அணைக்கட்டு சேதம்!

கிளிநொச்சி, ஒக். 27

கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்கு நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள குடமுருட்டிக்குளத்தின் அணைக்கட்டு பழுதடைந்தள்ளதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

8 அடி ஆறு அங்குலம் அடைவு மட்டம் கொண்ட குடமுருட்டி குளத்தின் அணைக்கட்டு பழுதடைந்து காணப்படுவதால் மழை காலங்களில் அது உடைக்கும் சாத்தியம் காணப்படுவதாக விவசாயிகள் குறிப்பிட்டனர்.

அணைக்கட்டை புனரமைத்துத் தருமாறு பல தடவைகள் உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தபோதும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என விவாசாயிகள் வேதனை தெரிவித்தனர்.

இதனால் அணைக்கட்டை பாதுகாக்கும் நோக்கில் மண் மூடைகள் அடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

அணைக்கட்டு புனரமைக்கப்படும் பட்சத்தில் இக் குளத்தின் கீழ் சுமார் 1000 ஏக்கருக்கு மேல் விவசாயத்தை மேற்கொள்ள முடியும் எனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.(அ)

# தடை செய்யப்பட்ட வலைகள் யாழ். நகரக் கடையில் சிக்கின!



யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ்ப்பாணம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட தீடீர் சுற்றிவளைப்பில் 140 கிலோ எடையுள்ள தடை செய்யப்பட்ட மீன் பிடி வலைகள் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள், கடற்படை அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் அவர்கள்இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியிலுள்ள கடை ஒன்றில் தடை செய்யப்பட்ட 140 கிலோ எடையுள்ள வலையுடன், கடையின் உரிமையாளர் ஒருவரை கைது செய்தனர்.

தீடீர் சுற்றிவளைப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கடற்றொழில் பரிசோதகர்கள் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# மெக்ஸிக்கோவுடன் ஒரு தசாப்தத்துக்கு பின்னர் இராஜதந்திர உறவுகளை புதுப்பிக்கும் இலங்கை

கொழும்பு, ஒக். 27

மெக்ஸிக்கோவுடன் ஒரு தசாப்ததுக்கு பின்னர் இராஜதந்திர உறவுகளை புதுபிக்கும் முயற்சியில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் மஹிந்த சமரசிங்க, இதற்கான ஆரம்ப ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சுகள் இதற்கான முழு ஒத்துழைப்புகளை வழங்கியுள்ளதுடன், மெக்ஸிகோவின் இராஜதந்திரிகளை அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் மஹிந்த சமரசிங்க சந்தித்து கலந்துரையாடல்களையும் நடத்தியுள்ளார்.

இருநாட்டு வெளிவிவகார அமைச்சுகள் சந்திப்புகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளுக்கு ஒத்துழைப்புகளை வழங்கியதால் அண்மையில் மஹிந்த சமரசிங்க தலைமையிலான குழுவொன்று அமெரிக்காவில் இருந்து மெக்ஸிக்கோவிற்கு சென்றது.

இலங்கைக்கும் மெக்ஸிக்கோவிற்கும் இடையில் சமூக பொருளாதார, அரசியல், மனித உரிமைகள் மற்றும் சுற்றுலா உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்புகளை ஏற்படுத்திக்கொள்ளும் நோக்கில் இருநாட்டு இராஜதந்திரிகளும் உடன்படிக்கையொன்றை இதன்போது கைச்சாத்திட்டனர்.



தூதுவர் மஹிந்த சமரசிங்கவிற்கும் மெக்ஸிக்கோவின் வெளியுறவு பிரதியமைச்சருக்கும் இடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. வெளியுறவு அமைச்சர் கார்மென் மொரேனோ டோஸ்கானோவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்.

இரு நாட்டு உறவை வலுப்படுத்த கலந்துரையாடல் தூதுவர் மஹிந்த சமரசிங்கவுக்கும் அந்நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது,

இலங்கை எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்னைகள் மற்றும் அவற்றை சமாளிப்பதற்காக இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து தூதுவர் மஹிந்த சமரசிங்க விளக்கமளித்தார்.

இருநாட்டு பொருளாதார உறவுகள் மற்றும் சுற்றுலாத்துறையை வலுப்படுத்துவது குறித்தும் இருவரும் இந்தச் சந்திப்பில் அவதானம் செலுத்தினர்.

(அ)

# மின் கட்டண அதிகரிப்பை எதிர்த்து கல்லடி பாலம் அருகில் ஆர்ப்பாட்டம்

## மட்டக்களப்பு மக்கள் திரண்டனர்





மட்டக்களப்பு, ஒக். 27

**மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் நேற்று முன் தினம் இரவு கைகளில் தீப்பந்தங்கள் ஏந்தியவாறு கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

ஆர்ப்பாட்டக்காரர்கள் அதிகரிக்கப்பட்டுள்ள மின் கட்டணத்தைக் குறைக்குமாறும், பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டு மக்களை பாதுகாக்குமாறும் வலியுறுத்தினர்.

கைகளில் தீப்பந்தங்களை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

மின் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தி நாடு முழுவதும் நேற்று முன் தினம் புதன் கிழமை மாத்திரம் 12 இடங்களில் தொடர் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இன நல்லுறவை கட்டியெழுப்பும் சரஸ்வதி பூசை அம்பாறையில்



அம்பாறை, ஒக். 27

சிறிலங்கா யுனைட்ஸ் அமைப்பு இலங்கையிலுள்ள இளைஞர் யுவதிகளுக்கிடையில் இன நல்லுறவை கட்டியெழுப்புவதில் மிக முக்கியமான பங்களிப்பை வழங்கி வருகின்றது.

அந்த வகையில் அம்பாறை சிறிலங்கா யுனைட்ஸ் நல்லிணக்க நிலையத்தில் மூவின இளைஞர், யுவதிகள் இணைந்து சரஸ்வதி பூசை நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தமை நல்லிணக்கத்திற்கான அடித்தளமாக அமைந்திருந்தது.

இனங்களுக்கிடையிலான கலை கலாசார விழிமியங்களை எல்லா இன மக்களும் அறிந்திருப்பதுடன் அவற்றிற்கு மதிப்பையும் மரியாதையையும் வழங்க இளையோர்கள் கற்றுக் கொள்ளும் சிறந்த பாலமாக இந்த யநிகழ்வு நடைபெற்றது.

# சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கு ஐந்து தேசிய விருதுகள் கிடைத்தன

அம்பாறை, ஒக். 27

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத் தின் "பிரஜா ஹரசர" தேசிய விருது விழாவில் சாய்ந்தமருது பிரதேச செயலகத் திற்கு "ஐந்து தேசிய விருதுகள் கிடைக்கப் பெற்றன.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத் தின் ஏற்பாட்டில் மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன் தினம் இடம் பெற்ற நிகழ்வில் இந்த தேசிய விருதுகள் கிடைக்கப் பெற்றன.

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் களான எம்.ஐ.அன்சார், ஏ.எம்.காலிதீன், சமுர்த்தி சமுதாய அடிப் படை அமைப்பின் தலைவர்களான ஏ.எம். நவாஸ், எஸ் எம் கமர்தீன் ஆகியோர் இவ்விருதுகளைப் பெற்றுக் கொண்டனர். (அ)

# பொத்துவில் உப பஸ் டிப்போ பிரதான டிப்போவாக உயர்வு

## முதற்கட்டமாக 60 ரூபா மில்லியன் நிதியும் ஒதுக்கீடு

அம்பாறை, ஒக். 27

பொத்துவில் உப பஸ் டிப்போ பிரதான டிப்போவாக தரமுயர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான துரித அபிவிருத்தித் திட்டங்களுக்கு முதற்கட்டமாக 60 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார்.

பொத்துவில் உப பஸ் டிப்போ பிரதான டிப்போவாக தரமுயர்த்துவதற்கான தீர்மானம் கடந்த வருடம் அமைச்சு மட்டத்தில் எட்டப்பட்டிருந்தது. நாட்டின் பொருளாதார பிரச்னை காரணமாக பொத்துவில் பஸ் டிப்போவில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திக்கென பணம் ஒதுக்குவதில் பல சிரமங்கள் காணப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறித்த காலப் பகுதியில் பொத்துவில் பஸ் டிப்போ அமைந்துள்ள நிலத்தின் சட்ட ரீதியான உரிமை மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில் குறித்த பஸ் டிப்போவின் துரித அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான முதற்கட்ட நிதியாக சுமார் 60 மில்லியன் ரூபா பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப்பின் வேண்டுகோளுக்கமைய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மிகுதிப் பணம் எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் உள்வாங்குவதாகவும் உறுதியளிக்கப்பட்டுள்ளதாக முஷாரப் எம்.பி. தெரிவித்தார்.

நவம்பர் முதலாம் வாரத்தில் பொத்துவில் உப பஸ் டிப்போ பிரதான டிப்போவாக தர்முயர்த்தும் நிகழ்வு உத்தியோகபூர்வமாக இடம்பெற இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.



# மாணவர்களுக்குப் போதை மாத்திரை விநியோகித்தவர் கல்முனையில் கைது

அம்பாறை, ஒக். 27

பாடசாலை மாணவர்களுக்கு நீண்ட காலமாக போதை மாத்திரைகளை சட்டவிரோதமாக விநியோகித்து வந்த சந்தேக நபர் கல்முனை விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்முனை விசேட அதிரடிப் படை முகாமிற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலினை அடுத்து நேற்று முன்தினம் இரவு சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த தேடுதல் நடவடிக்கையின்போது காரைதீவு காவல் பிரிவிற்குட்பட்ட அம்பாறை - காரைதீவு பிரதான வீதியில் வைத்து குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைதான சந்தேக நபர் அம்பாறை திசாபுர பகுதியை சேர்ந்த 28 வயது மதிக்கத்தக்கவர் என்றும், அவரிடமிருந்து, 500 போதை மாத்திரைகளும், அவர் பாவித்த கைத்தொலைபேசி என்பனவும் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டதாகவும் கூறப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபர் அவரிடமிருந்து கைப்பற்றப் பட்ட பொருட்களுடன் காரைதீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

# கல்வியியற் கல்லூரியில் விழிப்புணர்வு நிகழ்வு

மட்டக்களப்பு, ஒக். 27

அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியில், புதிதாய் இணைந்து கொண்டுள்ள முதலாம் வருட மாணவர்களுக்காக, கல்லூரியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் திசைமுகப்படுத்தும் தொடர் நிகழ்ச்சியில், ஒரு நிகழ்ச்சியாக "இளைஞர்கள் எதிர்நோக்கும் பாலியல் சவால்கள்" எனும் தலைப்பிலான விழிப்புணர்வூட்டல் நேற்று கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விசேட அதிதியாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியக் கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் கலந்து கொண்டு மாணவர்களுக்கு சிறப்புரை நிகழ்த்தினார்.



மேலும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பாலியல் நோய்கள் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம். என். எம். தில்ஷான் கலந்து கொண்டு இளைஞர்கள் எதிர்நோக்கும் பாலியல் சவால்கள் தொடர்பில் சிறப்பு விரிவுரை நடத்தினார். (அ)

ஈழநாடு



# சிரியாவின் மீதும் இஸ்ரேல் தாக்குதல்

## இரு துருவங்களாக பிரியும் உலக நாடுகள்

டெல் அவிவ், ஒக். 27

**இஸ்ரேல்-பலஸ்தீன போரின் எதிர்விளைவாக அண்டை நாடான சிரியா மீது இஸ்ரேல் விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன.**

**இந்த தாக்குதல் சம்பவத்தில் எட்டு இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளதுடன், ஏழு பேர் காயமடைந்துள்ளதாக சிரியா அரசு ஊடகம் தெரிவித்துள்ளது.**

**சிரியாவில் இருந்து ராக்கெட் தாக்குதல்.**

**இஸ்ரேல், காஸா மீது கடந்த ஒக்ரோபர் 7 ஆம் திகதி முதல் தாக்குதல் நடத்தி வருவதுடன், லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா முகாம்களையும் குறிவைத்து தாக்குதல் நடத்தியது.**



இந்நிலையில், அண்டை நாடான சிரியா மீதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

நேற்று முன்தினம் சிரியா பகுதியிலிருந்து இஸ்ரேல் மீது ரொக்கெட் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதற்கு பதிலடியாக இஸ்ரேல் தாக்குதல் நடத்தியிருக்கலாம் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதலில் சிரிய இராணுவத்தின் ஐந்தாவது பிரிவின் தலைமையக கட்டடம் சேதமடைந்துள்ளது.

போர் பதற்றத்தால் இரு அணிகளாக பிரியும் உலக நாடுகள்

இஸ்ரேலின் போர் பதற்றம் காஸாவை தாண்டி உலக நாடுகளிலும் எதிரொலிக்கும் அச்ச சூழ்நிலை எழுந்துள்ளது. அதனை உறுதிப்படுத்தும் விதமாய் இஸ்ரேல், லெபனான் மற்றும் சிரியாவில் நடக்கும் தாக்குதல்கள் பார்க்கப்படுவதுடன், உலக வல்லரசுகளும் இரு அணிகளாக பிரிந்து இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்துக்கு ஆதரவை வெளிப்படுத்தி வருகின்றன.

பெய்ரூட்டில் ஒன்றுகூடிய இஸ்ரேலுக்கு எதிரான அணி இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் நிலையில் அதற்கு எதிரான அமைப்பின் தலைவர்கள் சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளனர்.

லெபனானின் பெய்ரூட்டில் நடந்த இச்சந்திப்பில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ருல்லா, ஹமாஸ் துணைத்தலைவர் சலே அல் அரவுரி, பலஸ்தீன ஜிகாத் தலைவர் ஜியாத் அல் நகாலா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இஸ்ரேல் மீது வரும் நாட்களில் ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா இயக்கத்தினர் இணைந்து தாக்குதல்களை நடத்த கூடுமென சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறான சூழ்நிலை எழுந்தால் அமெரிக்கா சார் மற்றும் ரஷ்யா சார் அணிகள் நேரடியாக ஆதரவை வழங்கும் நிலைமை உருவாகலாம் என சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சிரியா மற்றும் லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல்களை நடத்த ஆரம்பித்துள்ளதால் காஸா பகுதி மக்களுக்கு ஆதரவாக லெபனானின் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் இஸ்ரேலுக்கு எதிராக நேரடியாக போர் தொடுக்க வாய்ப்பு உள்ளது.

சுமார் ஒரு இலட்சம் வீரர்கள், இரண்டு இலட்சம் அதிநவீன ஏவுகணைகள், ஏராளமான பீரங்கிகளை கொண்ட ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் நேரடியாக போரில் இறங்கினால் பாதிப்புகள் அதிகமாக இருக்கும்.

பலஸ்தீன மக்களுக்காகவும் முஸ்லிம் நாடுகளுக்கு ஆதரவாகவும் ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகள் குரல் எழுப்பி வருகின்றன.

இதே சூழல் தொடர்ந்து நீடித்தால் அமெரிக்கா தலைமையில் ஓரணியும் ரஷ்யா, சீனா தலைமையில் எதிரணியும் போரில் களமிறங்க வாய்ப்பிருக்கிறது.

எனவே, இஸ்ரேல்- ஹமாஸ் இடையிலான போர் மூன்றாம் உலகப்போராக மாறக்கூடிய ஆபத்து அதிகம் இருப்பதாகவும் சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ)



# காஸாவில் கொத்து கொத்தாக செத்து மடிகின்ற குழந்தைகள்!

ஜெருசலேம், ஒக். 27

இஸ்ரேல் வான் தாக்குதல் ஆரம்பித்த நாள் முதல் இதுவரையில் 5 ஆயிரத்திற்கும் அதிகமான பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கொல்லப்பட்டவர்களில் 40 சதவீதமானோர் குழந்தைகள் என காஸாவின் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேல் தாக்குதலால் தங்களது குழந்தைகள் உயிரிழந்தால் வைத்தியசாலைகளில் அவர்களை எளிதாக அடையாளம் காண்பதற்காக அவர்களது கால் பாதங்களில் பெயர்களை காஸா மக்கள் எழுதி வைக்கின்றனர்.

சி.என்.என்னில் பணிபுரியும் பத்திரிகையாளர் ஒருவர் எடுத்த காணொளியில் இது தெரியவந்துள்ளது.

கடந்த இரண்டு நாட்களில் ஒரே இரவில் இஸ்ரேல் வான் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட காஸாவின் மத்திய பகுதியிலுள்ள டெய்ர் அல் பலா மாவட்டத்தில் உள்ள அல் அக்ஸா தியாகிகள் வைத்தியசாலையில் இருந்து குழந்தைகளின் கால் பாதங்களில் பெயர்களைக் கொண்ட காணொளிகள் வெளியாகியுள்ளது.

ஒரு குழந்தை மற்றும் கொல்லப்பட்ட மூன்று சிறுவர்களை அவர்கள் காட்டுகின்றனர். அந்த சிறார்கள் மற்றும் ஒரு குழந்தையின் கால் பதாங்களில் அரபு மொழியில் பெயர் எழுதப்பட்டதை காணொளியில் காணமுடிகிறது.

நான்கு பேரும் சவக்கிடங்கு என நம்பப்படும் தோன்றும் ஒரு அறையிலுள்ள தரையில் வைக்கப்பட்டுள்ள ஸ்ட்ரெச்சர்களில் படுக்க வைப்பட்டுள்ளனர்.

அந்த அறையில் பல சடலங்கள் நிறைந்துள்ளன. அந்த குழந்தைகளின் பெற்றோர்களும் இறந்தனரா என்பது தெரியவில்லை.

அண்மைக் காலமாக இந்த நடைமுறை வழக்கமாகிவிட்டதாக சி.என்.என் செய்தியாளர்கள் கூறினர்.

இதனிடையே கடந்த 24 மணி நேரத்தில் 117 சிறுவர்கள் உட்பட 266 பேர் கொல்லப்பட்டதாக பாலஸ்தீன சுகாதார அமைச்சின் பேச்சாளரான வைத்தியர் அஷ்ரப் அல்-கித்ரா கூறினார்.

இதேவேளை, 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக அந்த அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், வான்வழி தாக்குதல்கள் இடம்பெற்ற பிரதேசங்களை சேர்ந்த சுற்று வட்டத்தில் இருந்த ஆயிரத்திற்கும் அதிகமான கட்டிடங்கள் தரைமட்டமாகியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் காஸாவில் இருந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்த நிலையில், 222 இஸ்ரேலியர்கள் தற்போது பணய கைதிகளாக ஹமாஸ் வசம் உள்ளதாக, காஸாவில் நிலைகொண்டுள்ள வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், பணயக்கைதிகள் சிலரது புகைப்படங்களும், காணொளிகளும் வெளியிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# மைனே மாநிலத்தில் இரவு மர்ம நபர் துப்பாக்கிச்சூடு!

நியூயோர்க், ஒக். 27

அமெரிக்கா - மைனே மாநிலத்தின் லூயிஸ்டனில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் மைனே மாநிலத்தில் உள்ள இராணுவத் தலம் மீது தாக்குதல் நடத்தப்போவதாக முன்னர் எச்சரிக்கை விடுத்திருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த நபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக மைனே மாநிலத்தின் லூயிஸ்டனில் நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சுமார் 22 பேர் கொல்லப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

லூயிஸ்டனின் பல்வேறு பகுதிகளில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குடியிருப்பாளர்களை வீடுகளுக்குள் இருக்குமாறு பொலிஸார் வலியுறுத்தினர்.

குறித்த நபரை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், வீதித்தடைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# காஸா மீது தரைவழியான ஆக்கிரமிப்புக்குத் தயார்!

## பெஞ்சமின் நெத்தன்யாகு



டெல் அவிவ், ஒக். 27

காஸா மீது தரைவழியான ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு தாம் தயாராகி வருவதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு அறிவித்துள்ளார்.

ஹமாஸால் கட்டுப்படுத்தப்படும் பலஸ்தீன பகுதிக்குள் படைகள் எப்போது செல்வது என்பது குறித்து அரசாங்கத்தின் சிறப்பு போர் அமைச்சரவையால் முடிவு எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

ஏற்கனவே ஆயிரக்கணக்கான பயங்கரவாதிகளை கொன்றுள்ளோம் என்றும் இது ஆரம்பம் மட்டுமே என்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு தெரிவித்துள்ளார்.

சுமார் 1,400 பேரைக் கொன்ற இஸ்ரேல் மீதான ஹமாஸ் நடத்திய தாக்குதலை தொடர்ந்து, காசா பகுதி மீது இஸ்ரேல் பல நாட்கள் தீவிர குண்டு தாக்குதலை நடத்தி வருகின்றது.

இதில் 6,500 இற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாக காஸாவின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஹமாஸ் தாக்குதலுக்கு வழிவகுத்த பாதுகாப்பு தோல்விகளுக்கு இதுவரை பொறுப்பேற்காத நெதன்யாகு, சம்பந்தப்பட்ட அனைவரும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் என கூறியுள்ளார்.

இதேவேளை, காசா மீதான படையெடுப்பை இப்போதைக்கு தாமதப்படுத்த இஸ்ரேல் ஒப்புக் கொண்டுள்ளதாக அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய அதிகாரிகளை மேற்கோள் காட்டி, வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் செய்தி வெளியிட்டுள்ளது. (அ)

# சர்வதேசத்தை வெல்ல வந்த ரணிலினால் நாணய நிதியத்தை வெல்லமுடியவில்லை

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

**கொழும்பு, ஒக். 27**

**சர்வதேசத்தை தமது இராஜதந்திரத்தால் வெற்றி கொள்வேன் எனக் கூறிய தலைவரால் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இரண்டாம் தவணை கடனைக்கூட உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.**



எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் வலியுறுத்தியதாவது-

பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்துள்ளது. வெள்ளம், சுனாமி, உள்நாட்டு கிளர்ச்சிகள், பல வருட கால பிரிவினைவாத யுத்தம் என பல அனர்த்தங்களுக்கும், நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்துள்ளோம். ஆனால், இக்கால கட்டங்களில் பொருளாதாரம் வங்குரோத்தடையவில்லை.

ஒரு குடும்பம் இந்த நாட்டை வங்குரோத்தியுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவேன், சர்வதேச தொடர்புகளை இதற்காக பயன்படுத்துவேன், சர்வதேச ஆதரவுகளை பெறுவது எவ்வாறு எனக் காட்டுகிறேன் என ராஜபக்சர்களின் ஆசிர்வாதத்தோடு ஆட்சிக்கு வந்த தலைவரால் தமது இராஜதந்திரத்தை பயன்படுத்தி சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட தவனையைகூட உரிய நேரத்தில் பெற முடியாமல் தோல்வியடைந்துள்ளார்.

நாளுக்கு நாள் மக்கள் மீது வரிகளை மேலும் விதித்து சுமைகளை ஏற்றும் செயற்பாட்டையே அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

ஆட்சியை நீடிப்பதற்கான மந்திரங்களை தேடுவதிலேயே அரசாங்கம் காலத்தை கழிக்கிறது. மக்கள் ஆணையற்ற அரசாங்கத்தின் இறுதி நாடகமே தற்போது அரங்கேற்றப்பட்டு வருகிறது.

நாட்டின் சகல தரப்பு மக்களும் அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். மக்களின் நாளாந்த நுகர்வுப் பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கப்படுவதால் மக்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

பண வீக்கம் குறைந்துள்ளதாக அரசாங்கம் ஆய்வுகளை வெளியிட்டாலும், உண்மையிலையே பணவீக்கம் குறைந்துள்ளதா அல்லது அதிகரித்துள்ளதா என்பதை சந்தைக்கு சென்று பார்த்தால் நடைமுறை ரீதியாக புரிந்துகொள்ள முடியும்.

மின் கட்டண அதிகரிப்பு மக்களுக்கு மின் தாக்கியதை போன்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது. மின்கட்டணம் 69.9 வீதத்தால் முதல்கட்டமாக அதிகரிக்கப்பட்டது. பின்னர் 18 வீதத்தால் அதிகரித்தனர். ஒரு வருட காலத்தில் 153 வீதத்தால் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வருடத்திற்கு இரு முறை மாத்திரமே மின் கட்டண அதிகரிப்பை ஏற்படுத்தலாம் என மின்சார சட்டம் கூறுகிறது. ஆனால், முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் மின்சார சபையினால் மின் கட்டணத்தை அதிகரிக்க முடியும் என எரிசக்தி அமைச்சர் கூறுகிறார்.

மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மின் கட்டண திருத்தங்களை மேற்கொள்ள அமைச்சரவை அனுமதியை கோரியுள்ளதாக எரிசக்தி அமைச்சர் கூறியுள்ளார்.

பில்லியன் கணக்கான நட்டத் தொகையை ஈடுகட்டவே இவ்வாறு அதிகரிப்பதாக அமைச்சர் கூறி வருகிறார். ஆனால், மின்சார சபை நட்டமடைய என்ன காரணம் என்பதை அவர் கூற வேண்டும்.

அடுத்த வருடம் வறட்சி ஏற்படும் என்ற எதிர்வுகூறலையும் விலை ஏற்றத்துக்கான காரணமாக கூறுகின்றனர்.

அரசியலமைப்பின் பிரகாரம் பல்வேறு தேர்தல்களை நடத்த வேண்டியுள்ள தருணத்திலும் தேர்தல் முறை மாற்றம் என்ற மந்திர தந்திரங்களில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதாக கட்சி சம்மேளனத்தில் கூறிய ஜனாதிபதியே தேர்தல் சட்டங்களை திருத்துவதற்கான ஆணைக்குழுவை நியமித்து தனது இரட்டை வேடத்தை நாட்டுக்கு காண்பித்துள்ளார்.

அது மட்டுமல்லாது தேர்தல் முறை திருத்தம் தொடர்பான கலந்துரையாடலுக்கு பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுக்கு பிரதமரும் அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதியும்,பிரதமரும் இவ்வாறு ஆணைக்குழுக்களை நியமித்து, விசேட குழுக்களை நியமித்து இவற்றை மேற்கொள்வதன் நோக்கம் அடுத்த தேர்தல்களையும் பிற்போடுவதற்கா என்ற பலத்த சந்தேகம் எமக்குள்ளது. ஆனால், இது தோல்வியைத் தழுவும் முயற்சியாகும்-என்றார். (அ)

# இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்துக்கு தெரிவான பருத்தித்துறை பிரதேச செயலர் சிறி

வடமராட்சி, ஒக். 27



பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி பொதுச்சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கமைய 01.01.2023 திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ளார் என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

வடமராட்சி புலோலியை பிறப்பிடமாகக் கொண்ட ஆழ்வாப்பிள்ளை சிறி வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவன் ஆவார். 1999 ஆண்டு அபிவிருத்தி உத்தியோகத்தராக மண்முனை வடக்கு பிரதேசசெயலகத்தில் அரச நியமனத்தை பெற்ற இவர் 2002 ஆம் ஆண்டு உதவிதிட்டமிடல் பணிப்பாளராக பணிபுரிந்து 2003 ஆண்டு இலங்கை நிர்வாக சேவைப் போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்து இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாக நியமனம் பெற்றார். நானாட்டான் மற்றும் வவுனியா பிரதேசசெயலகங்களில் உதவி பிரதேசசெயலாளராக பணிபுரிந்து பின் நெடுந்தீவு மற்றும் நல்லூர் பிரதேச செயலகங்களின் பிரதேசசெயலாளராக சிறப்பாக சேவையாற்றி 2017 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேசசெயலத்தின் பிரதேச செயலாளராக கடமையாற்றி வருகின்றார்.

வடமராட்சி வடக்கு பிரதேச மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காகவும் இடர் நிலைகளை குறைப்பதற்காகவும் நேர்மையுடன் பாரபட்சமின்றி பொதுமக்களின் தேவைகளை நன்கறிந்து அதனை நிவர்த்தி செய்யும் இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாக சிறப்பாக செயற்பட்டு வருகின்றார்.

கடந்த 2018 மற்றும் 2022 ஆண்டுகளில் தேசிய உற்பத்தித்திறன் போட்டிகளில் வடமராட்சி வடக்கு பிரதேசசெயலகம் தேசிய நிலையில் இரண்டாம் நிலையினை பெற்றுக் கொள்வதற்கு இவரது அர்ப்பணிப்பான சேவையே காரணமாகும். அத்துடன் பருத்தித்துறை பிரதேச செயலகம் இவரது சேவைக்காலத்தில் மேலும் பல மாவட்ட மற்றும் தேசிய விருதுகளை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# புலமைப்பரிசில் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் ஆரம்பம்

கொழும்பு, ஒக். 27

புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்று முதல் எதிர்வரும் 31ஆம் திகதி வரை மதிப்பீட்டு பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நாடளாவிய ரீதியில் 434 நிலையங்களில் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பரீட்சைகள் பிரதி ஆணையாளர் நாயகம் லசிக சமரக்கோன் தெரிவித்தார்.

இதேவேளை, தவணைப் பரீட்சைகள் நடைபெறுவதனால் மாத்தறை மாவட்டத்தில் மாத்திரம் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

2023ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையானது கடந்த 15ஆம் திகதி இடம்பெற்றது. (அ)

# வர்த்தகரிடம் இலஞ்சம் கோரி அச்சுறுத்தல் விடுத்த நபர் கைது

கொழும்பு, ஒக். 27

வெளிநாட்டில் உள்ள திட்டமிட்ட குற்றவாளி ஒருவரின் வழிகாட்டுதலின் கீழ் வர்த்தகர் ஒருவரிடம் இலஞ்சம் கோரி அச்சுறுத்திய நபரை முல்லேரிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் குறித்த வர்த்தகருக்கு தனது கைத்தொலைபேசியில் அழைப்பு விடுத்து 20 இலட்சம் ரூபாவை இலஞ்சமாக கோரியதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர் மூலம் இலஞ்சம் கோரி கொலை மிரட்டல் விடுத்ததாக கடந்த 19ஆம் திகதி பிற்பகல் முல்லேரிய பொலிஸாருக்கு வர்த்தகரிடமிருந்து முறைப்பாடு கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, அழைப்பு விடுத்த நபர் நேற்று முன் தினம் அங்கொடை - தெல்கஹவத்த பிரதேசத்தில் வைத்து முல்லேரிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபருடன் இலஞ்சம் கோரிய தொலைபேசியின் சிம் அட்டையும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அங்கொட - தெல்கஹவத்த பிரதேசத்தை சேர்ந்த 51 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், இவ்வாறான அச்சுறுத்தல் விடுக்கும் தொலைபேசி அழைப்புகள் கிடைத்தால் உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்குமாறு பொலிஸ் ஊடகப் பிரிவு பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது. (அ)

# வெளிநாடுகளில் உள்ள தொழிலாளர்களால் மாதாந்தம் 500 மில்லியன் டொலர் வருமானம்

## அமைச்சர் மனுஷ நாணயக்கார தகவல்

கொழும்பு, ஒக். 27

வெளிநாடுகளிலுள்ள இலங்கை தொழிலாளர்களால் மாதாந்தம் 500 மில்லியன் டொலர் வருமானம் கிடைக்கின்றதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த ஆண்டில் மாத்திரம் அரசாங்கத்துக்கு 3.5 பில்லியன் டொலர் வருமானம் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களால் கிடைத்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இதனை விட மிகக் குறைந்த கடன் தொகையே கிடைக்கவுள்ளது.

எவ்வாறிருப்பினும் அந்தக் கடன் தொகையைப் பெறுவதற்கான இணக்கப்பாட்டை எட்டுவதன் மூலம் இலங்கைக்கு கிடைக்கும் நம்பகத்தன்மை மிக முக்கியத்துவமுடையதாகும்.

இந்த நம்பகத்தன்மையை உருவாக்கினால் மாத்திரமே ஏனைய நாடுகளிடமிருந்து முதலீடுகளையும் ஏனைய உதவிகளையும் பெற முடியும். இதற்காக வெளிப்படை தன்மையுடன் நிதி ஒழுக்கத்தை பேண வேண்டியுள்ளது.

அத்தோடு நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றுவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

அதன் அடிப்படையிலேயே மின்சாரம் மற்றும் நீர் கட்டணங்களில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது.

எனினும் எதிர்க்கட்சிகள் இதனை தமது அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்திக் கொள்கிறது.

மறுபுறம் இஸ்ரேல் - ஹமாஸ் மோதல் உலக பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

எரிபொருளுக்கான கேள்வி அதிகரித்துள்ளமையால் அதன் விலைகளும் அதிகரிக்கக் கூடிய நிலைமை ஏற்படும். அத்தோடு மத்திய கிழக்கிலுள்ள இலங்கை தொழிலாளர்கள் தமது தொழில்களை இழக்கக் கூடிய வாய்ப்பும் உள்ளது.

அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் மேற்கூறியவாறு மாதாந்தம் கிடைக்கும் 500 மில்லியன் டொலர் வருமானம் வீழ்ச்சியடையும். எனவே இவ்வாறான அனைத்து நெருக்கடிகளையும் எதிர்கொள்வதற்கு அனைவரும் தயாராக வேண்டும்-என்றார். (அ)

## மின்கட்டண...

ஆரம்பிக்கப்பட்ட பேரணி அங்கிருந்து மருதடி வீதியுடாக - பொஸ்கோ வீதியை அடைந்து அங்கியிருந்து இளம் கதிர் சனசமூக விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக நிறைவடைந்தது.

யாழ்.மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம அமைப்பாளர் வெற்றிவேல் ஜெயேந்திரன்,உதவி அமைப்பாளர் சுப்பிரமணியம் சிறிகாந்தராசா ஆகியோர் தலைமையில் இப் தீப்பந்த போராட்டம் இடம்பெற்றது

இதில் உள்ளூர் மக்கள் பலரும் கலந்து கொண்டனர். (அ)

## யாழ்...

பொலிஸாரின் செயற்பாடுகள் மந்தகதியில் இடம்பெறுவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

அதாவது இராணுவத்தினை யாழில் தொடர்ச்சியாக இங்கே நிலைநாட்டுவதற்காகக்கூட இந்தச் செயற்பாடுகள் அமைந்திருக்கலாம்.

கொழும்பில் ஜனாதிபதிக்கு எதிராக ஒருவர் முகப்புத்தகத்தில் பதிவிட்டால் உடனே கைது செய்கின்றார்கள். போராட்டம் நடத்தினால் கைது செய்கிறார்கள் ஆனால் யாழ்ப்பாணத்தில் அச்சுறுத்தும் வகையில் பட்டப்பகலில் கூடி கேக் வெட்டியவர்களை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்ட போதும் இன்று வரை 8 பேரை மட்டுமே கைது செய்துள்ளார்கள்.

இதிலிருந்து எமக்கு ஒன்று புரிகின்றது. பொலிஸாரின் செயற்பாடு மிக மந்தகதியில் உள்ளது.

அதாவது யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரை நிலை நாட்டுவதற்காகவே பொலிஸார் இவ்வாறு செயற்படுகிறார்களா என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லாதுவிட்டால் பொலிஸ் அதிகாரத்தை மாகாணத்திடம் தாருங்கள் - என்றார். (அ)

## யாழ்.நகரில்...

மீட்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனவும் போதைப் பொருள்களை கொள்வனவு செய்வதற்காகவே காஸ் சிலிண்டர் திருடியதாகவும் ஆரம்ப விசாரணையில் தெரிவித்துள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்டவர்கள் குருநகர் பகுதியில் சேந்தவர்கள் எனவும் விசாரணைகளின் பின் நீதிமன்றத்தின் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## அவுஸ்திரேலிய...

நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நிகழ்வின் பிரதம அதிதியாக அவுஸ்திரேலியா வின் பெடரல் பொலிஸின் இலங்கைக் கிளை பொலிஸ் அத்தியட்சகர் ரொபர்ட் வில்சன் வருகை தந்திருந்தார்.

மன்னார் மாவட்டத்தின் கடற்பரப்புகளில் மேற்கொள்ளப்படும் ஆட்கடத்தல், மனித வியாபரம், மற்றும் கடல்சார் குற்றங்களை கட்டுப்படுத்துவதற்காக இந்த புதிய குற்றப்புலனாய்வுப் பிரிவு திறந்து வைக்கப்பட்டது.

அவுஸ்திரேலிய பொலிஸாரின் 150 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் குற்றப்புலனாய்வு அலுவலகம் நிர்மாணிக்கப்பட்டு நேற்று அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது

இந்த நிகழ்வில் குற்றப்புலனாய்வுப் பிரிவின் பிரதி பொலிஸ்மா அதிபர் பிரசாத் ரணசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர். பின்னர் மன்னார் மாவட்டத்தில் இடம்பெறும் கடல்சார் பிரச்னைகள் தொடர்பில் மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளுடன் அவுஸ்திரேலியாவின் பெடரல் பொலிஸின் இலங்கைக் கிளை பொலிஸ் அத்தியட்சகர் ரொபர்ட் வில்சன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். (அ)

## மக்களின்...

ஏற்படுத்தக் கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீவகப் பிரதேசங்களுக்கான போக்குவரத்து தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அதிகாரிகள், நயினாதீவிற்கும் குறிகாட்டுவானுக்கும் இடையிலான போக்குவரத்தில் ஈடுபடுகின்ற பாரிய தனியார் பயணிகள் படகு குறிகாட்டுவான் இறங்கு துறையில் நீண்ட நேரம் தரித்து நிற்பதால், நெடுந்தீவிற்கான பயணிகள் படகு சேவையை சீரான முறையில் உரிய நேரத்திற்கு முன்னெடுக்க முடிவதில்லை எனவும், இதனால் அரச உத்தியோகஸ்தர்களும் பயணிகளும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்தனர்.

இந்நிலையில், மேற்கண்டவாறு தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த விவகாரம் தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி, நெடுந்தீவு மக்கள் எதிர்கொள்ளும் தேவையற்ற அசௌகரியங்களை களையுமாறும் அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம், மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ். சார்ள்ஸ் ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, மத்திய அரசாங்கத்தினாலும் மாகாண நிர்வாகத்தினாலும் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத் திட்டங்கள் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டது.

மேலும், யாழ். மாவட்டத்தில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் சட்ட விரோத, சமூக விரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக, வனவளப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களினால் கையகப்படுத்தப்பட்டுள்ள மக்களின் பூர்வீக குடியிருப்புக்களையும் விவசாய மற்றும் நீர்வேளாண்மை செயற்பாடுகளுக்கு பொருத்தமான காணிகளையும் விடுவிக்கும் நோக்கில், 1985 ஆண்டுக்குப் பின்னர் குறித்த அரசாங்க திணைக்களங்களினால் அடையாளப்படுத்தப்பட்ட காணிகள் அனைத்தும் மீள்பரிசீலனை செய்யப்படு விடுவிக்கப்பட வேண்டும் என ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

அதேபோன்று, சட்ட விரோத மணல் அகழ்வு மற்றும் சட்ட விரோத மதுபான சாலைகள், அனுமதியற்ற முறையில் விவசாய நிலங்களில் கட்ட டங்கள் கட்டப்படுதல் போன்றவற்றை கட்டுப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன், அவற்றை பூரணமாக கட்டுப்படுத்துவதற்கான ஆலோசனைகளும் மக்கள் பிரதிநிதிகளினால் அதிகாரிகளுகளுக்கு வளங்கப்பட்டது.

அதேபோன்று கால்நடை, விவசாயம் போன்ற துறைகளை விருத்தி செய்தல் மற்றும் போக்குவரத்து தரப்பினர், சிகை அலங்கரிப்பாளர்கள் போன்றோர் எதிர்கொள்ளும் தொழில்சார் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

இன்றைய கூட்டத்தில், மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற மக்கள் பிரதிநிதிகள், பிரதேச செயலாளர்கள் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களகங்களின் அதிகாரிகள், சமூகப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர். (அ)

# மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்ட எட்டு பேர் கைது

கொழும்பு,ஒக் 27

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள மவுசாகல நீர் தேக்கத்தின் நீர் செல்லும் ஆற்றில் சட்ட விரோதமான முறையில் மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்ட எட்டு பேர் கைது செய்யப்பட்டு இன்று ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த பட்டதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்ய பட்டவர்கள் நோட்டன் பகுதியில் உள்ள திபட்டன் தோட்டத்தை சேர்ந்த மூன்று பேரும் இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த ஐந்து பேர் அடங்கிய எட்டு பேர் ஆவர்.

பொலிஸாருக்குக் டைத்த இரகசிய தகவல்களை தொடர்ந்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய அதிகாரி மற்றும் ஏனைய பொலிசார் அங்கு சென்று மாணிக்ககற்கள் அகழ்வில் ஈடுபட்ட எட்டு பேர் மற்றும் அகழ்விற்கு உபயோகித்த ஆயுதங்களையும் கைப்பற்றினர்.

அத்துடன் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்து ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த பட்டதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

## ரணிலுக்கு...

கலந்துரையாடியுள்ளது.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற விசேட சந்திப்பொன்றில் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாக அக்கட்சியின் தகவல் அறியும் வட்டாரங்களில் அறிய முடிகிறது.

பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் குழுவொன்றும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளது.

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் மக்களுக்கு நிவாரணம் கிடைக்க வேண்டும் எனவும், நிவாரணம் கிடைக்காவிடின் அரசாங்கத்திற்கு வழங்கப்படும் ஆதரவு குறித்து தீர்மானம் எடுக்க வேண்டும் எனவும் சிரேஷ்ட உறுப்பினர்கள் குழு இந்த சந்திப்பில் வலியுறுத்தியுள்ளதாகவும் அறிய முடிகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மறுசீரமைப்புக்கு பொதுஜன பெரமுனவின் சார்ப்பில் கடுமையான எதிர்ப்புகள் வெளிப்படுத்தப்பட்டு வரும் பின்புலத்திலேயே இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது. (அ)

## மேய்ச்சல்...

நில காணியை விடுவிக்குமாறு தெரிவித்தே குறித்த போராட்டம் இடம்பெற்றது.

“ஒவ்வொரு வருடமும் மாந்தை மேற்கு, இலுப்பை கடவை பகுதிக்கு தமது கால்நடைகளை மேய்தலுக்காக கொண்டு செல்கின்றோம். இதன்போது பல்வேறு சொல்லண்ணா துயரங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றோம்.

அத்துடன் கால்நடை இழப்புக்களும், மனித இழப்புக்களும் அடிக்கடி இடம்பெறுகின்றன.

கட்டுக்கரைக் குளத்திற்குட்பட்ட புல்லறுத்தான் கண்டல் பகுதியை மேச்சல் நிலமாக பிரகடனப்படுத்த வேண்டும் என பல வருடங்களாக கோரிக்கை விடுத்து வந்தோம்.

கடந்த 12 ஆம் திகதி வட மாகாண ஆளுநர் தலைமையில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமும் இது வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது வேதனையளிக்கிறது.

இவ்விடயத்தில் அதிகாரிகள் அலட்சியமாகவே நடந்துக்கொள்கின்றமை வெளிப்படையாக புலப்படுகிறது. எமக்கான மேய்ச்சல் நிலங்களை உடனடியாக விடுவித்து தருமாறு கோருகின்றோம்” எனப் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இந்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், நானாட்டான் - முசலி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள், சிவில் சமூக அமைப்புக்கள், மதத் தலைவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, ஆர்ப்பாட்டக்காரர்களால் மகஜர் ஒன்றும் மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளரிடம் கையளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## முடிந்தால்...

“நாட்டை அழித்து வங்குரோத்து நிலைக்கு அழைத்துசென்ற ராஜபக்ச குடும்பத்தினர், தமது பாதுகாப்புக்காக ஜனாதிபதி ஒருவரை நியமித்துக் கொண்டனர். அந்த ஜனாதிபதிமீது அந்த குடும்பத்தின் அரச குமாரர் (நாமல் ராஜபக்ச) கோபத்தில் உள்ளாராம். அமைச்சரவை மறுசீரமைப்பால்தான் அவர் கடுப்பில் உள்ளாராம். இவ்வாறு கோபப்படும் அரச குடும்பம், சுகாதார அமைச்சர் மீதான நம்பிக்கையில்லா தீர்மான வாக்கெடுப்பின் போதுகூட, நாடு குறித்து சிந்திக்காமல் தம்மைப் பற்றி சிந்தித்தே செயற்பட்டது.

எனவே, இவர்களின் நாடகத்தை இனியும் நம்புவதற்கு நாட்டு மக்கள் தயாரில்லை. இவர்கள் எவ்வாறு நாட்டை அதலபாதாளத்திற்கு இட்டுச் சென்றார்கள் என்பது முழு நாட்டிற்கும் தெரியும் , ஜனாதிபதியை விமர்சிப்பது போல் நடித்தாலும் பாதீட்டை ஆதரித்தே வாக்களிப்பார்கள். முடியுமா னால் வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்துக் காட்டுமாறு சவால் விடுக்கின்றேன். ”
- என்றார் சஜித். (அ)

## நாமல்...

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் பூனைக்குட்டிகளைப் போல ஊமையாக பதுங்கி இருந்தார்கள் என்று பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் அவர்கள் இருவரும் தற்போது நாய்களை போல் குரைப்பதாகவும் நிமல் லான்சா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவி வழங்கியமை குறித்து ஜனாதிபதியை பாராளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ மன்றும் சாகர காரியவசம் ஆகியோர் கடுமையாக விமர்சித்திருந்தனர்.

இது குறித்து கருத்து வெளியிட்ட போது நிமல் லான்சா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அண்மைய அமைச்சரவை மறுசீரமைப்பு குறித்து கருத்து வெளியிட்ட அவர், ஜனாதிபதி விஞ்ஞான ரீதியாக இலாகாக்களை ஒருங்கிணைத்துள்ளார்.

இது ஒரு பயனுள்ள முடிவு என்றும் நிமல் லான்சா தெரிவித்துள்ளார்.

”நாமலும், சாகரவும் அதை எதிர்த்துப் பேசினால், அவர்கள் தங்கள் தலையில் ஏதேனும் அசாதாரணம் இருக்கிறதா என்று சோதிக்க வேண்டும்” என்று அவர் கூறினார்.

“அரசாங்கத்திலிருந்து வெளியேறும் தைரியம் சாகரவிற்கு உள்ளதா என்று நான் சந்தேகிக்கிறேன்.

ஏனெனில் அது அவர்கள் அனைவரையும் ஒரு அவநம்பிக்கையான சூழ்நிலையில் தள்ளக்கூடும்,” என்று அவர் மேலும் கூறினார்.

கோட்டாபய ராஜபக்ச அமைச்சரவையை நான்கு தடவைகள் மாற்றியமைத்த போது நாமல் ராஜபக்ச மிகவும் அமைதியாக இருந்தார்.

எனினும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சில அமைச்சுக்களை மாற்றியமைத்த போது, ‘பயனற்ற சண்டி பேச்சுக்களை’ பேசுகின்றார்.

“கோட்டாபய ராஜபக்சவை கேள்வி கேட்க நாமலுக்கு ஏன் தைரியம் வரவில்லை?

நாமலும், சாகரவும் அவர்களின் தலையை சோதிக்க வேண்டும். நாட்டை அழித்த பிறகு பேசுகின்றார்கள்” என்று லான்சா கடுமையாக சாடினார். (அ)

ஈழநாடு
Eelanadu

# இளம் குடும்பஸ்தர் அடித்துக் கொலை!

**வட்டக்கச்சிப் பகுதியில் கொடூரம்**



கிளிநொச்சி, ஒக். 27

கிளிநொச்சி-வட்டக்கச்சிப் பகுதியில் 23 வயதான இளம் குடும்பத்தர் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளது.

கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சி-5 வீட்டுத்திட்டம் பகுதியில் குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கல்மடுநகர்-சம்புக்குளம் பகுதியைச் சேர்ந்த 23 வயதான ஒரு பிள்ளையின் தந்தையான இளம் குடும்பத்தரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

வெற்றிலை வாங்குவதற்காக கடைக்குச் சென்ற குறித்த நபருக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்துள்ளது. குறித்த அழைப்பின் பின்னர் கடையை விட்டு மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார்.

சற்று நேரத்தில் சத்தம் கேட்டது. அதன் பின்னர் இருவர் சம்பவ இடத்தை விட்டு ஓடினர்.

இரவு என்பதால் அவர்கள் யார் என அடையாளம் காண முடியவில்லை என பொலிஸாரின் விசாரணையின்போது சம்பவத்தை அவதானித்தவர்கள் சாட்சியம் வழங்கியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் இராமநாதபுரம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கட்டையால் தாக்கப்பட்டு உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

சந்தேக நபர்களை கைது செய்யும் நடவடிக்கையில் குற்றத்தடுப்பு பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (அ)

# வடக்கு அரச அதிகாரிகளை கடிந்துகொண்டார் ஆளுநர்!

**பொருத்தமற்ற திட்டங்களை சமர்ப்பித்ததால்**

யாழ்ப்பாணம், ஒக். 27

**யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.**

**இதன்போது விவசாயத் திணைக்களத்தினால் இந்த வருடத்துக்கான முன்மொழிவு ஒன்று ஒழுங்கிணைப்புக் குழுவின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டது.**



இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் விவசாயத் திணைக்கள அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பினார்.

அரசாங்க நிதியில் செயற்படுத்தப்படும் செயற்திட்டத்தை வருட இறுதியில் நடைமுறைப்படுத்த அனுமதி கோரினால் எவ்வாறு அந்தத் திட்டத்தை முழுமையாக செயற்படுத்த முடியும்? அவ்வாறு செயற்படுத்த முடியாது. இது ஒரு நையாண்டியான விடயம் எனக் கடுமையான தொனியில் ஆளுநர் அதிகாரிகளை எச்சரித்தார்.

மக்களுக்கான திட்டங்களை இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏன் தெரியப்படுத்துவதென்றால், மக்கள் பிரதிநிதிகள் அதனை ஏற்று அதற்குரிய ஒப்புதலை வழங்குவதற்காகவே. எனவே எதிர்வரும் காலங்களில் இவ்வாறு செயற்படவேண்டாம் என ஆளுநர் அதிகாரிகளை எச்சரிக்கை செய்தார். (அ)

# யாழ்.மாவட்ட மதுவரி திணைக்களத்தின் அதிகாரியை எச்சரித்தார் வடக்கு ஆளுநர்!



யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ். மாவட்ட மதுவரி திணைக்களத்தின் அதிகாரியை நேற்று நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போது கடிந்துகொண்டார் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ்.

நேற்று நடந்த யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாவட்டத்தில் சட்டவிரோதமாக இயங்கும் மதுபானச்சாலைகள் தொடர்பில் விவாதிக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் மதுவரித் திணைக்கள உதவிப் பணிப்பாளரிடம், சட்டவிரோத மதுபானச்சாலைகள் தொடர்பில் ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை?

நீங்கள் இவ்வாறு சட்டவிரோத மதுபானச்சாலைகளுக்கு ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் அரசாங்கத்துக்கு வரும் வருமானத்தை இழக்கச் செய்கின்றீர்கள். அத்தோடு அதிகாரிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குவதில்லை. இந்த கூட்டத்துக்குக்கூட திணைக்களத்துக்கு பொறுப்பானவர் வருவதில்லை. உதவி அத்தியட்சகர் தான் ஒவ்வொரு முறையும் இந்தக் கூட்டத்துக்கு வருகின்றார்.

எனவே சட்டவிரோத மதுபானச்சாலைகளைக் கட்டுப்படுத்தவேண்டிய பொறுப்பு உங்களுக்கு உள்ளது. அதை நீங்கள் செயல்படுத்தவேண்டும். அடுத்த முறை நீங்கள் கூட்டத்திற்கு வரும்போது இவ்வளவு காலத்தில் எத்தனை சட்டவிரோத மதுபானச்சாலைகளை கட்டுப்படுத்தி இருக்கிறீர்கள் என்ற விவரத்துடன் வரவேண்டும்-என கடும் தொனியில் எச்சரித்தார். (அ)

# 8 திட்டங்கள் குறித்து ஆராய சீ.வீ.கே. தலைமையில் குழு

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள எட்டுத் திட்டங்கள் தொடர்பில் ஆராயும் குழுவின் தலைவராக வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் நியமிக்கப்பட்டுள்ளார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள எட்டு திட்டங்கள் தொடர்பில் நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

குறித்த திட்டங்களுக்கான காணிகளை வழங்குவதற்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி தருமாறு நிறுவனத்தின் பணிப்பாளரால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

காணி வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதையடுத்து ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எட்டு திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தின் வடக்குக்கான இணைப்பாளர் எல்.இளங்கோவன் மற்றும் அந்தந்த பிரதேச செயலர்கள் அடங்கிய குழுவை நியமித்தார். (அ)

# டக்ளஸின் கோரிக்கையை நிராகரித்த மணிவண்ணன்!



யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு பதிலாக யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் கலந்து கொண்டார்.

ஆயினும் அவர் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்கினேஸ்வரனுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமராமல் வேறொரு இடத்தில் அமர்ந்திருந்தார்.

மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் சார்பில் யாராவது கூட்டத்துக்கு வந்திருக்கிறீர்களா? அவ்வாறு வந்தால் உங்களுக்கு முன்னால் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அங்கே வந்து உட்காருமாறு கோரினார். ஆயினும் முன்னாள் முதல்வர் மணிவண்ணன் அந்தக் கோரிக்கையை நிராகரித்து வேறொரு ஆசனத்திலேயே அமர்ந்திருந்தார். (அ)

# 'பெல்' அடித்து உள்ளே செல்லும் சாராயக்கடை!

**உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஒருங்கிணைப்பு குழு தலைவர் பணிப்பு**

யாழ்ப்பாணம், ஒக். 27

உடுப்பிட்டிப் பகுதியில் சட்டவிரோத மதுபானச்சாலை ஒன்று இயங்கி வருவதாகவும், அந்த மதுபானச்சாலை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் ஆராய்ந்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்-

உடுப்பிட்டி மக்கள் வங்கிக்கு அருகில் உள்ள ஒரு வீடு ஒன்றில் சட்டவிரோதமான மதுபானச்சாலை ஒன்று இயங்கி வருகின்றது. மதுபானச்சாலைக்கு செல்வோர் பெல் அடித்து உள்ளே சென்று மதுபானத்தைக் கொள்வனவு செய்ய முடியும். எனவே அதனைக் கட்டுப்படுத்துமாறு கோருகின்றோம் - என்றார்.

இதனை அடுத்து குறித்த பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரியை உடனடியாக சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரால் பணிப்புரை விடுக்கப்பட்டது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# மக்ஸ்வெல் அதிரடி சதம்! ஆஸி. இமாலய வெற்றி

புதுடில்லி, ஒக். 27

நெதர்லாந்து அணியை 309 ஓட்டங்களால் வெற்றி கொண்டது அவுஸ்திரேலிய அணி.

நடப்பு உலகக் கிண்ணத் தொடரின் 24ஆவது லீக் போட்டியில் டில்லி அருண் ஜெட்லீ மைதானத்தில் அவுஸ்திரேலியா - நெதர்லாந்து அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடியது. இதில், மிட்செல் மார்ஷ் விரைவாகவே வெளியேறி இம்முறை ஏமாற்றினாலும், வோர்ணர்- ஸ்மித் கூட்டணி நெதர்லாந்தை சிதறடித்தது.

இருவரும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஓட்டங்களை குவித்தனர். ஸ்மித் 71 ஓட்டங்கள் சேர்த்து அவுட் ஆக, டேவிட் வோர்ணர் தொடர்ந்து இரண்டாவது சதத்தை பதிவு செய்தார்.

உலகக் கிண்ணத்தில் வோர்ணரின் 6ஆவது சதம் இதுவாகும். இதன்மூலம் உலகக் கிண்ணத்தில் அதிக சதங்கள் அடித்தவர்கள் பட்டியலில் 6 சதங்கள் அடித்திருந்த சச்சினின் சாதனையை சமன் செய்தார். மோர்னஸ் லபுஷான் 62 ஓட்டங்களுக்கும், வோர்ணர் 104 ஓட்டங்களுக்கும் விக்கெட்டான பின்னர், கிளென் மக்ஸ்வெல் அதிரடி காண்பித்தார்.

முதல் 7 பந்துகளில் 14 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்த மக்ஸ்வெல் அடுத்த 33 பந்துகளில் சதம் அடித்து அசத்தினார். உலகக் கிண்ண வரலாற்றில் அதிவேகமாக எடுக்கப்பட்ட சதம் இதுவாகும். நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்க வீரர் மார்க்ரம் 49 பந்துகளில் எடுத்த சதமே உலகக் கிண்ணத்தில் அதிவேகமாக எடுக்கப்பட்ட சதமாக இருந்தது. அதனை 18 நாட்களில் முயறியடித்தார் மக்ஸ்வெல்.

இறுதியில், 50 ஓவர்களில் அவுஸ்திரேலிய அணி 8 விக்கெட்கள் இழப்புக்கு 399 ஓட்டங்கள் குவித்தது. மக்ஸ்வெல் 44 பந்துகளில் 106 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

நெதர்லாந்து தரப்பில் லோகன் வான் பீக் 4 விக்கெட் வீழ்த்தினார்.

400 ஓட்டங்கள் இலக்கை துரத்திய நெதர்லாந்து 90 ஓட்டங்களுக்கு சுருண்டது. அந்த அணியின் முக்கிய வீரர்கள் உட்பட யாரும் பெரிதளவு சோபிக்கவில்லை. தொடக்க வீரராக இறங்கி நிதானமாக ஆடிய விக்ரம்ஜித் சிங் 25 ஓட்டங்களில் ரன் அவுட் ஆனார்.

இதன்பின் வந்தவர்கள் வருவதும் போவதுமாக இருந்தனர். இதனால், 90 ஓட்டங்களில் நெதர்லாந்து அணி சுருண்டது. இதன்மூலம் 309 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணி அபார வெற்றிபெற்றது. அவுஸ்திரேலிய அணி தரப்பில் அடம் ஸம்பா 4 விக்கெட்கள் வீழ்த்தினார். இதேபோல் மிட்செல் மார்ஷ் 2 விக்கெட்கள் வீழ்த்தினார்.



## மோசமான பந்துவீச்சாளர்!

புதுடில்லி, ஒக். 27

115 ஓட்டங்களை அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக விட்டுக் கொடுத்து மோசமான பந்துவீச்சாளர் என்ற பெயரைப் பெற்றுள்ளார் நெதர்லாந்தின் பாஸ் டி லீட்.

உலகக் கிண்ணத்தில் நெதர்லாந்து - அவுஸ்திரேலியா மோதிய போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது.

இந்த போட்டியில் நெதர்லாந்து அணி சார்பாக விளையாடிய சகலதுறை வீரர் பாஸ் டி லீட் உலகக் கிண்ணப் போட்டிகள் மட்டுமின்றி ஒட்டுமொத்த சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலும் சேர்த்து மோசமான சாதனை படைத்துள்ளார்.

மோசமான பந்துவீச்சாளர் என்ற பட்டியலிலும் முதலிடம் பிடித்துள்ளார். அந்த வகையில் இந்த போட்டியின் போது 10 ஓவர்கள் வீசிய அவர் 2 விக்கெட்களை வீழ்த்தி இருந்தாலும் 115 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்திருந்தார்.

இதன்மூலம் ஒரே போட்டியில் அதிக ஓட்டங்கள் விட்டுக்கொடுத்த மோசமான பந்து வீச்சாளர் என்ற சாதனையை அவர் படைத்தார். இதற்கு முன்னதாக அவுஸ்திரேலிய வீரர் மைக் லீவிஸ் என்பவர் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக 10 ஓவரில் 113 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்திருந்தார். இதேபோல அடம் ஸாம்பாவும் தென்னாபிரிக்கா அணிக்கு எதிராக 113 ஓட்டங்களை விட்டுக் கொடுத்திருந்தார். ஆனால், இவர்கள் இருவரையும் கடந்த பாஸ் டி லீட் இந்த பேட்டியில் 115 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இங்கிலாந்துடனான போட்டி ஹார்திக் ஆடுவது சந்தேகம்

பெங்களூர், ஒக். 27

இந்திய அணியின் சகலதுறை வீரர் ஹார்திக் பாண்ட்யா பங்காளதேஷுக்கு எதிரான ஆட்டத்தில் பந்தை தடுக்க முயற்சித்த போது இடறி விழுந்து இடது கணுக்காலில் காயமடைந்தார்.

பரிசோதனையில் தசைநாரில் சிறிய அளவில் பாதிப்பு ஏற்பட்டு இருப்பது கண்டறியப்பட்டது.

இதனால், உலகக் கிண்ணத்தில் நியூசிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் விளையாடவில்லை. அவர் தற்போது பெங்களூரில் தேசிய கிரிக்கெட் அக்கடமியில் காயத்தில் இருந்து மீள்வதற்கான பயிற்சி முறைகளை மேற்கொண்டுள்ளார். கிரிக்கெட் சபையின் மருத்துவ குழு முன்பாக நேற்று அவருக்கு உடல்தகுதி சோதனை நடத்தப்பட்டது.

நாளை மறுதினம் லக்னோவில் நடக்கும் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியிலும் அவர் ஆடமாட்டார் என்று கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவித்தன. நொக்-அவுட் சுற்றுக்கு முன்பாக அவர் முழு உடல்தகுதியுடன் இருக்க வேண்டும் என்று அணி நிர்வாகம் விரும்புகிறது. அதனால் அவருக்கு அதற்கு அடுத்த ஆட்டத்திலும் ஓய்வு அளிக்கப்படலாம் என்று தெரிகிறது. (ஐ)




## விராட் 50ஆவது சதத்தை ஈடன்கார்டனில் அடிப்பார்

### சுனில் கவாஸ்கர் கணிப்பு

கொல்கத்தா, ஒக். 27

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் விராட் கோலி தனது 50ஆவது சதத்தை அடிப்பார் என்று சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

ஒருநாள் உலகக் கிண்ணத் தொடர் இந்தியாவில் நடக்கிறது. இதுவரை நடந்து முடிந்துள்ள லீக் ஆட்டங்களின் முடிவில் இந்தியா, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா அணிகள் புள்ளிப்பட்டியலில் முதல் 4 இடங்களில் உள்ளன.

இந்திய அணியின் விராட் கோலிக்கு ஒருநாள் கிரிக்கெட்டில் அதிக சதங்கள் அடித்த வீரர் என்ற சச்சினின் (49) உலக சாதனையை முறியடிக்க இன்னும் இரண்டு சதங்களே உள்ளன.

விராட் கோலி இந்த உலகக் கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்துக்கு எதிரான சவால் மிகுந்த போட்டிகளில் 85, 95 ஓட்டங்கள் எடுத்து வெற்றியில் முக்கிய பங்காற்றினார். இருப்பினும் நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் 5 ஓட்டங்களில் சதத்தை தவற விட்ட அவர் ஒருநாள் கிரிக்கெட்டில் அதிக சதங்கள் அடித்த வீரர் என்ற சச்சினின் (49) உலக சாதனையை சமன் செய்யும் வாய்ப்பை தவற விட்டது சில ரசிகர்களுக்கு ஏமாற்றமாக அமைந்தது.

இந்நிலையில், ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக விராட் கோலி தன்னுடைய 50வது ஒருநாள் சதத்தை அடிப்பார். அதை அன்று அவர் தம்முடைய பிறந்தநாளில் அடிப்பதை விட வேறு என்ன சிறப்பு இருக்க முடியும்? என்று கூறியுள்ளார் அந்த அணியின் முன்னாள் தலைவர் சுனில் கவாஸ்கர். (ஐ)




## அடம் ஸம்பா புதிய சாதனை!



புதுடில்லி, ஒக். 27

நடப்பு உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் அதிக விக்கெட்களை வீழ்த்தியோர் பட்டியலில் அடம் ஸம்பா 13 விக்கெட்களுடன் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

நெதர்லாந்து அணிக்கு எதிரான அடம் ஸம்பா தொடர்ந்து 3 போட்டிகளில் 4 விக்கெட்களை கைப்பற்றினார். இதன் மூலம் உலகக் கிண்ணத்தில் 4 அல்லது அதற்கு மேல் விக்கெட்களை தொடர்ந்து 3 போட்டிகளில் கைப்பற்றிய 3ஆவது வீரர் என்ற சிறப்பை ஸம்பா பெற்றார்.

ஏற்கனவே, பாகிஸ்தானின் ஷகிட் அப்ரிடி 2011ஆம் ஆண்டிலும் இந்தியாவின் முகமது ஷமி 2019ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்திலும் இந்தச் சாதனையை செய்துள்ளனர்.

அத்துடன், நடப்பு உலகக் கிண்ணத்திலும் அதிக விக்கெட் வீழ்த்தியோர் பட்டியலில் அடம் ஸம்பா 13 விக்கெட்களுடன் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார். நியூசிலாந்தின் மிட்செல் சான்ட்னெர் (12 விக்கெட்) 2ஆவது இடத்தில் இருக்கிறார். (ஐ)

# இஸ்ரேலுக்காக அமெரிக்கா அதிகபட்சம் என்ன செய்யும்?

**ஜொனாதன் பேலி**

# போரில் இறங்க தயாராக உள்ளதா?

அமெரிக்கா தடையற்ற ஆதரவை இஸ்ரேலுக்கு தொடர்ந்து தருவ தாக உறுதியளித்துள்ளது. அதற்காக தனது ராணுவ உதவியையும் அளித்துள்ளது. ஆனால் இப்பகுதியில் கடந்த காலச் சிக்கல்களின் வடுக்கள் இன்னும் உணரப்படுவதால், அமெ ரிக்காவின் ஈடுபாட்டிற்கான வரம்பு எவ்வ ளவு தூரம் உள்ளது?

இஸ்ரேல் மீதான ஹமாஸின் தாக்குத லுக்கு தனது முதல் எதிர்வினையில், அமெரிக்க அதிபர் பைடன், அமெரிக்கா யார் பக்கம் என்பதை தெளி வுபடுத்தினார்: ‘அமெரிக்கா இஸ்ரேலுக்கு பின்னே பக்க பலமாக உள்ளது,” என்று அவர் கூறினார்.

“சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கும் எவருக்கும், என்னிடம் ஒரு வார்த்தை உள்ளது: வேண்டாம்,” என்று அவர் மேலும் கூறினார்.

அதாவது, சூழ்நிலையைப் பயன்படுத்தி, இரு தரப்பினருக்கிடையே நடக்கும் மோதலில் தலையிட வேண்டாம் எனும் பொருள் படும்படி கூறியிருந்தார்.

இந்த எச்சரிக்கை ஈரான் மற்றும் அதன் நட்பு நாடுகளுக்குத்தான் எனத் தெளிவாகத் தெரிந்தது.

ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள அமெரிக்க துருப்புகள் சமீபத்திய நாட்களில் பல முறை தாக்கப்பட்டுள்ளதாக பென்டகன் கூறுகிறது.

செங்கடலில் நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்க போர்க் கப்பலில் உள்ள ஏவுகணை தடுப்பு அமைப்பு யேமனில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணையை இடைமறித்துள்ளது. அது, இஸ்ரேலைக் குறிவைத்து ஏவப்பட்டதாக கருதுவதாக பென்கடன் கூறியிருந்தது.

அமெரிக்கா ஏற்கனவே கிழக்கு மத்தியதரைக் கடலில் ஒரு விமானந்தாங்கி போர்க்கப்பலை நிறுத்தியுள்ளது. விரைவில் அந்த பிராந்தியத்திற்கு மற்றொரு விமானந்தாங்கி போர்க்கப்பலையும் அனுப்பவுள்ளது. ஒவ்வொரு விமானந்தாங்கி கப்பலிலும் 70 க்கும் மேற்பட்ட போர் விமானங்கள் உள்ளன. தேவைப்பட்டால் அப்பகுதிக்கு செல்ல ஆயிரக்கணக்கான அமெரிக்க ராணுவ வீரர்களை பைடன் தயார் நிலையில் வைத்துள்ளார்.

அமெரிக்கா இஸ்ரேலின் மிகப்பெரிய ராணுவ புரவலராக உள்ளது. ஆண்டுக்கு 3.8 பில்லியன் டாலர்கள் இஸ்ரேல் பாதுகாப்புக்காக உதவி செய்கிறது.

காஸா மீது குண்டுவீசும் இஸ்ரேலிய ஜெட் விமானங்கள் அமெரிக்காவில் தயாரானவை. வழிகாட்டுதலின் பேரில் இலக்குகளை துல்லியமாக தாக்கக் கூடிய ஆயுதங்கள் இப்போது பயன்படுத்தப்படுகின்றன.

இஸ்ரேலின் அயர்ன் டோம் எனப்படும் வான் பாதுகாப்பு அமைப்புகள் சிலவும் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டவை தான்.

இஸ்ரேல் கேட்பதற்கு முன்பே அமெரிக்கா இந்த ஆயுதங்களை மீண்டும் விநியோகித்துள்ளது. அதேபோல, கடந்த வெள்ளியன்று இஸ்ரேலுக்கு உதவியாக 14 பில்லியன் டாலரை வழங்க அமெரிக்க நாடாளுமன்றத்தை கேட்டுக்கொண்டார் அதிபர் பைடன்.

அடுத்த நாள், பென்டகன், டெர்மினல் ஹை ஆல்டிடியூட் ஏரியா டிஃபென்ஸ் பேட்டரி உட்பட இரண்டு சக்தி வாய்ந்த ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகளை மத்திய கிழக்கிற்கு அனுப்புவதாக அறிவித்தது. ஆனால், ஒரு அமெரிக்க அதிபர், அமெரிக்காவில் தேர்தல் நடக்கவிருக்கும் ஆண்டில் மற்றொரு போரில் தலையிட தயாராக விரும்புவாரா ?

### காஸாவிற்கு நேரடியாக ராணுவத்தை அனுப்புமா அமெரிக்கா?

அமெரிக்காவுக்கான முன்னாள் அமெரிக்க இஸ்ரேலிய தூதரான மைக்கேல் ஓரென், அதிபர் பைடன் ஏற்கனவே அமெரிக்க விமானந்தாங்கி கப்பல்களை அப்பகுதிக்கு நகர்த்துவதன் மூலம் முதல் படியை எடுத்துள்ளதாக நம்புகிறார்.

“நீங்கள் அதைப் பயன்படுத்த தயாராக இல்லாவிட்டால், அந்த வகையான கைத்துப்பாக்கியை நீங்கள் வெளியே எடுக்க மாட்டீர்கள்” என்று அவர் கூறுகிறார்.

ஆனால் வாஷிங்டனில் உள்ள சர்வதேச ஆய்வுகளுக்கான மையத்தின் சர்வதேச பாதுகாப்பு இயக்குனர் சேத் ஜி ஜோன்ஸ் கூறுகையில், “காஸாவில் நேரடியாக ராணுவ ரீதியாக ஈடுபடுவதற்கு அமெரிக்கா மிகவும் தயங்குகிறது.” என்றார்.

அமெரிக்க ராணுவத்தின் இருப்பு மற்றும் உளவுத் தகவல்களை சேகரிக்கும் திறன் மற்றும் வான் பாதுகாப்புக் கவசம் போன்றவற்றால், அமெரிக்கா துப்பாக்கியால் சுடாமலேயே இஸ்ரேலுக்கு அதிக நன்மைகளைத் தர முடியும் என்றும் அவர் கூறுகிறார்.

இது முதன்மையாக இஸ்ரேலின் வடக்கில் இருந்து வரும் அச்சுறுத்தலாகும். குறிப்பாக ஆயுதக்குழுவான ஹெஸ்புலாவிடமிருந்து வந்த அச்சுறுத்தலாகும். இது இப்போது இஸ்ரேலையும் அமெரிக்காவையும் கவலையடையச் செய்கிறது.

காஸாவில் ஹமாஸை விட ஈரானிய ஆதரவுக் குழு



மிகப் பெரிய அச்சுறுத்தலாகும். இது சுமார் 1,50,000 ராக்கெட்டுகளின் ஆயுதக் குவியலைக் கொண்டுள்ளது, அவை ஹமாஸ் பயன்படுத்தியதை விட மிகவும் சக்தி வாய்ந்தவை மற்றும் துல்லியமானவை. அது ஏற்கனவே தனது எதிரியான இஸ்ரேலுடன் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளது.

இஸ்ரேல் காஸாவிற்குள் நுழைந்து தாக்குதல் நடத்தி, ஹமாஸ் ஆயுதக்குழுவினர் சோர்வாக இருக்கும்போது, ஹெஸ்புலா தலையிடக் கூடும் என்று ஓரன் அஞ்சுகிறார்.



அது நடந்தால், லெபனானுக்குள் உள்ள இலக்குகளைத் தாக்குவதற்கு அமெரிக்கா தனது கணிசமான வான் படையைச் ஏற்பாடு செய்யும் சாத்தியம் இருப்பதாக ஓரென் நம்புகிறார்.

### அமெரிக்காவின் தலையீட்டால் என்ன நடக்கும்?

வெளியுறவுச் செயலர் ஆண்டனி பிளிங்கன் மற்றும் பாதுகாப்புச் செயலர் லாயிட் ஆஸ்டின் இருவரும், நிலைமை தீவிரமடைந்து, ஏதேனும் அமெரிக்கப் பணியாளர்கள் அல்லது ராணுவம் குறி வைக்கப்பட்டால், அமெரிக்கா பதிலடி கொடுக்கும் என்று உறுதியளித்துள்ளனர்.

தன்னைத்தானே தற்காத்துக் கொள்ள அமெரிக்காவிற்கு உரிமை உண்டு என்றும், ‘தகுந்த நடவடிக்கை எடுக்க” அது தயங்காது என்றும் ஆஸ்டின் கூறினார்.

ஜோன்ஸ், மோதல் விரிவடைவதற்கான அபாயத்தை ஒப்புக்கொள்கிறார்.

லெபனானில் உள்ள ஹெஸ்புலா, இஸ்ரேலின் வடக்கில் இருந்து ஒரு பெரிய தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டால், ‘அவர்கள் மிகவும் கடுமையான பதிலடியை சந்திக்க நேரிடும்” என்று அவர் கூறுகிறார்.

பிராந்தியத்தில் அமெரிக்கப் படைகள், ஈரானிய தொடர்புடைய குழுக்களின் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்க வந்துள்ளன என்று அவர் குறிப்பிடுகிறார்.

ஹமாஸுடனான போரில் இஸ்ரேல் நேரடி ராணுவ ஆதரவையும் கோரவில்லை. ஜெருசலேமின் ஹீப்ரு பல்கலைக்கழகத்தின் ராணுவ வரலாற்றின் பேராசிரியர் டேனி ஆர்பாக், இஸ்ரேலின் ராணுவக் கோட்பாடு தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள முடியும் என்று குறிப்பிடுகிறார்.

இந்த வாரம் அதிபர் பைடன் இஸ்ரேலுக்கு சென்றது, அமெரிக்காவின் ஆதரவு நிபந்தனைக்கு உட்பட்டது என்பதைக் காட்டுகிறது.

காஸாவிற்குள் மனிதாபிமான உதவிகளை இஸ்ரேல் அனுமதிக்க வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார். மேலும், இஸ்ரேல் காஸா பகுதியை கால வரையின்றி ஆக்கிரமிப்பதையும் அவர் விரும்பவில்லை. அவ்வாறு செய்வது ‘பெரிய தவறு” என்றும் அவர் கூறியிருந்தார்.

அமெரிக்காவின் ஆதரவு காலவரையறையுடன் இருக்கலாம். ராணுவ ஆய்வாளரும் ஜெருசலேம் போஸ்ட்டின் கட்டுரையாளருமான யாகோவ், காஸாவில் இஸ்ரேல் ராணுவ நடவடிக்கை தொடங்கி, பொதுமக்கள் உயிரிழப்புகள் அதிகரித்தவுடன் இஸ்ரேலுக்கான அமெரிக்காவின் ஆதரவுக்கு எதிராக அழுத்தம் வரும் என்று நம்புகி



றார். வரும் வாரங்களில் ஆதரவு குறையும் என்று அவர் நம்புகிறார்.

இஸ்ரேலுக்கான ராணுவ ஆதரவு மற்றும் பிராந்தியத்தில் அதன் சொந்த ராணுவத்தை நிறுத்துவது ஆகியவை மோதல் விரிவடைவதைத் தடுக்க போதுமானதாக இருக்கும் என்று அமெரிக்கா தெளிவாக நம்புகிறது.

இஸ்ரேல் சார்பாக அமெரிக்கா நேரடியாக தலையிட்டதற்கு சில முன் உதாரணங்கள் உள்ளன. 1991 வளைகுடா போரில் இஸ்ரேல் படையெடுப்பிற்கு முன்னதாக, ஈராக்கிய ஸ்கட் ஏவுகணை தாக்குதல்களில் இருந்து இஸ்ரேலை பாதுகாக்க பேட்ரியாட் பேட்டரிகளை அமெரிக்கா அனுப்பியது.

உண்மையில், அமெரிக்கா பெரும்பாலும் இஸ்ரேலின் மீதான தனது ராணுவச் செல்வாக்கை ஒரு கட்டுப்பாட்டுக் கரமாகப் பயன்படுத்துகிறது.

●

# தமிழ்நாடு ஆளுநரை கையாள முடியாமல் திணறுகிறதா திமுக?

## மாநில பாஜக நிலைப்பாடு மாறுவது ஏன்?

**முரளிதரன் காசி விஸ்வநாதன்**

திராவிடம் குறித்தும் தமிழ்நாட்டில் உள்ள கட்சிகள் குறித்தும் தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி பேசியிருப்பது மீண்டும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. ஆளுநர் மீண்டும் மீண்டும் இப்படிப் பேசுவது ஏன்?

தற்போதைய தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி பல்வேறு நிகழ்ச்சிகளில் பேசும் கருத்துகள் அவ்வப்போது சர்ச்சையை ஏற்படுத்திவருகிறது. இப்போது இரு நாட்களுக்கு முன்பாக திருச்சியில் நடந்த ஒரு விழாவில் அவர் பேசிய பேச்சு, மறுபடியும் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

திருச்சியில் உள்ள தனியார் ஐ.ஏ.எஸ். பயிற்சி மையத்தின் சார்பில் மருது பாண்டியர்களின் நினைவு தினம் அக்டோபர் 23ஆம் தேதி நடைபெற்றது. இந்த விழாவில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி பங்கேற்றுப் பேசினார். திராவிட இயக்கம், இந்திய சுதந்திர இயக்கத்திற்கு எதிரானது என்பதையே அவரது பேச்சின் மையக் கருத்தாக இருந்தது.

“நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக தமிழ்நாட்டிற்கு வந்தபோது, தமிழகத்திலிருந்து சுதந்திரத்திற்குப் பாடுபட்ட வீரர்களின் பட்டியலைக் கேட்டேன். மாநில அரசிடமிருந்து வந்த பட்டியலில் 40க்கும் குறைவான பெயர்களே இருந்தன. அந்தப் பட்டியலில் மருது சகோதரர்களின் பெயர்கள் இல்லை. சிறிய மாநிலமான நாகாலாந்திலேயே ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுதந்திரப் போராட்ட வீரர்கள் இருந்தார்கள். ஆனால், எப்படி தமிழ்நாட்டில் மட்டும் குறைவாக இருக்க முடியும் என ஆராய்ந்தேன். அப்படி ஆராய்ந்தபோது பல ஆயிரம் சுதந்திரப் போராட்ட வீரர்கள் இருந்தார்கள்.

சிவகங்கை மாவட்டம்தான் சுதந்திரத்திற்கான சிந்தனையும் வீரர்களும் உருவான இடம். இந்த இடத்தில் மக்கள் கூடக்கூடாது என ஆணை பிறப்பிக்கப்படுகிறது. ஆகஸ்ட் 24 முதல் அக்டோபர் 31வரை இந்த ஆணை அமலில் இருக்கிறது. 2012ல், சில சட்டம் - ஒழுங்கு பிரச்னை ஏற்பட்டு சிலர் கொல்லப்பட்டார்கள். அதனால்தான், இந்த நாயகர்களை, அவர்களது தியாகத்தை ஒட்டுமொத்தமாக கொண்டாட தடை விதிக்கப்படுகிறது.

சட்டம் - ஒழுங்கு பிரச்சனை ஏற்படலாம். அந்த பதற்றத்தை குறைக்க வேண்டியது மாநில அரசின் கடமை. மாறாக, 11 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவத்திற்காக இப்போதும் தடை விதிக்கப்படுகிறது. எந்த ஒரு அரசியல் கட்சியின் தலைவர்களின் நினைவு நாளிலாவது இது போன்ற பிரச்னை ஏற்பட்டால், இப்படித் தடை விதிக்கப்படுமா? இல்லை.

ஆனால், சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்றால் இப்படிச் செய்யப்படுகிறது. இன்று இந்தத் தலைவர்கள் ஜாதி தலைவர்களாக சுருக்கப்பட்டிருப்பது வருத்தத்தை தருகிறது. எப்படி, ஏன்? இந்தத் தலைவர்களை மாநில அரசு கொண்டாடியிருந்தால் மக்களும் சேர்ந்து கொண்டாடியிருப்பார்கள். பள்ளி பாடப் புத்தகங்களில் அவர்களைப் பற்றி இல்லை.

இந்தியாவின் எந்த மாநிலத்திலும் மாணவர்கள் ஜாதிக் கயிறு அணிந்துகொண்டு பள்ளிக்கூடத்திற்கு சென்றதில்லை. சமூகம் ஜாதியாக பிரிந்துகிடக்கிறது. தேசிய தலைவர்கள் மறக்கப்பட்டுவிட்டார்கள். அவர்கள் ஏன் மக்களின் மனதிலிருந்து மறக்கடிக்கப்பட்டார்கள்? விடை எளிதானது.

சுதந்திரப் போராட்ட இயக்கத்தைப் பற்றி பேச இங்குள்ள ஆட்சியாளர்கள் பயப்படுகிறார்கள். வெட்கப்படுகிறார்கள். அதைப் பற்றிப் பேசினால், அவர்கள் அம்பலப்பட்டு போவார்கள். இவர்கள் இந்திய சுதந்திரத்திற்கு எதிராகப் பேசியவர்கள். இவர்கள் பிரிட்டிஷாருடன் சேர்ந்துகொண்டு சுந்திரத்திற்கு எதிராகச் செயல்பட்டவர்கள்.” என்று அவர் கூறினார்.



மேலும் பேசிய அவர், ‘கடந்த ஆண்டு காந்தி பிறந்த நாள் வந்தபோது, அவருடைய புகைப்படக் கண்காட்சி நடத்தப்பட்டது. அவர் தமிழ்நாட்டிற்கு 18 முறை வந்திருக்கிறார். அவருடைய நிறைய புகைப்படங்கள் இருக்கின்றன. ஆனால், திராவிடத் தலைவர்களோடு ஒரு புகைப்படமும் இல்லை. அது அவர்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியதால் இந்த ஆண்டு புகைப்பட கண்காட்சியே நடத்தப்படவில்லை.

மகாத்மா காந்தி, சர்தார் படேல், சுபாஷ் சந்திர போஸ், பகத் சிங் ஆகியோர் இங்கு பிறந்திருந்தால், அவர்களும் ஜாதித் தலைவர்களாக மாற்றப்பட்டிருப்பார்கள். அந்த நிலைதான் தமிழ்நாட்டில் இருக்கிறது. இதை ஏற்க முடியாது.

இந்த நிலத்தின் வரலாற்றை அழித்து வேறொரு வரலாற்றை எழுதும் முயற்சி நடக்கிறது. ஆரியம் - திராவிடம் என்ற இனவாத வரலாற்றை எழுதும் முயற்சி நடக்கிறது. இந்தக் கருத்தாக்கத்தின் தந்தை யார்? தென்னிந்திய மொழிகளின் ஒப்பிலக்கியத்தை எழுதியவர் ராபர்ட் கால்டுவெல்.

இவர் யார் தெரியுமா? 1813ல் இந்திய சார்ட்டர் சட்டத்தை பிரிட்டிஷ் அரசு உருவாக்கியது. அந்தச் சட்டத்தின்படி, இந்தியாவை கிறிஸ்தவமயமாக்குவதும் ஒரு நோக்கமாக இருந்தது. இதற்காக தன்னார்வலர்களைச் சேர்த்தார்கள். இதற்காக பள்ளிப் படிப்பை பாதியில் விட்டவர்களைச் சேர்த்தார்கள். அப்படி ஒருவர்தான் ராபர்ட் கால்டுவெல். அவர்தான் இலக்கணத்தை எழுதி, இது வேறு மொழி, அது வேறு மொழி என்றார்.

இது பிரிட்டிஷாரின் சதி. சுதந்திரப் போராட்டம் தீவிரமடைந்த போது அவர்கள் இங்கே கூட்டாளிகளைச் சேர்த்துக் கொண்டார்கள். இங்கே இப்போது வழிபடப்படுபவர்கள், லண்டனுக்குச் சென்று இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுக்கக் கூடாது என்றார்கள். சுதந்திரத்திற்கு எதிரான இயக்கம், ஆரிய - திராவிட பிரிவை வைத்து உருவாக்கப்பட்டது.

ஆகஸ்ட் 15ஆம் தேதியை கருப்பு நாளாக அனுஷ்டித்தார்கள். அதனால்தான் சுதந்திர இயக்கத்தைப் பற்றிப் பேசவே பயப்படுகிறார்கள்” என்றார்.

ஆளுநரின் இந்தப் பேச்சு சமூக வலைதளங்களில் விவாதத்தை எழுப்பியது. அவரது பேச்சு முழுவதும் திராவிட இயக்கத்தைப் பற்றியதாகவே இருந்ததால், எதிர்பார்த்ததைப் போலவே ஆளும் தி.மு.க. தரப்பிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலுவை வைத்து ஒரு பதில் அறிக்கை வெளியிடப்பட்டது.

“சட்ட முன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டிய ஆளுநர் ஆர்.என்.ரவி தன் பொறுப்பை நிறைவேற்றாமல், மக்கள் வரிப்பணத்தில் ஊர்ஊராகச் சுற்றி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராகவும், தமிழ்நாட்டு மக்களின் உணர்வுக்கு எதிராகவும் தொடர்ந்து பேசி வருவது, அரசியல் சாசனத்திற்கு அவர் செய்கின்ற துரோகம்.

ஆளுநர் பொறுப்பேற்பவர்கள் அரசியல்வாதி போல



செயல்படவோ பரப்புரை செய்யவோ மாட்டார்கள். அந்த மரபுக்கு மாறாக, அப்பட்டமான ஆர்.எஸ்.எஸ். பிரதிநிதியாக, ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஊதுகுழலாக ஆளுநர் ஆர்.என்.ரவி செயல்படுவதோடு, தமிழ்நாட்டின் பண்பாடு, வரலாறு, தமிழ்மொழியின் உயர்வு இவற்றுக்கு எதிராகத் தொடர்ந்து உளறிக் கொண்டிருக்கிறார்.

தமிழ்நாடு என்று சொல்லாதீர்கள், தமிழகம் என்றுதான் சொல்ல வேண்டும் என்று உளறினார். சமஸ்கிருதத்தை முன்வைத்து தமிழைப் பின் தள்ளினார். வேதங்களைப் பார்த்து திருக்குறள் எழுதப்பட்டதாகச் சொன்னார். எவ்வித ஆதாரமுமின்றி இப்படி பச்சைப் பொய்களைச் சொல்வதுடன், திராவிடம் என்ற கருத்தியல் பற்றி அவர் உளறிக் கொட்டுவது ஒவ்வொரு மேடையிலும் வழக்கமாக இருக்கிறது.

பா.ஜ.க. தலைவர்கள் எப்படி அன்றாடம் பொய் பேசி, வதந்தி பரப்புகிறார்களோ, அவர்களுக்குப் போட்டியாக, தமிழ்நாட்டின் பா.ஜ.க. தலைவராக வேண்டும் என்ற ஆசையில் ஆளுநரும் பொய்யாகவே பேசுகிறார்.

மருது பாண்டியர் உள்ளிட்ட தமிழ்நாட்டின் சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் வரலாற்றை சித்தரிக்கும் ஊர்திகளை டெல்லி குடியரசு தின விழா அணிவகுப்பில் சேர்க்க முடியாது என மறுத்து ஒன்றிய பா.ஜ.க. அரசு திருப்பி அனுப்பிய போது இந்த ஆளுநர் ரவி எங்கே போனார்? அலுவலகத்தில் தேசியக் கொடியையே ஏற்றாமல் இருந்த ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பிரச்சாரகராக பவனி வரும் ரவி தனது திருவாயை ஏன் அப்போது திறக்கவில்லை?

பா.ஜ.க.வின் ஊதுகுழலாகப் பச்சைப் பொய்களை மட்டுமே பேசும் ஆளுநர் ரவியின் அடிவயிற்று எரிச்சல், ‘திராவிடம்’ என்ற சொல். அந்த வயிற்றெரிச்சலில், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை எழுதிய இராபர்ட் கால்டுவெல் அதிகம் படிக்காதவர் என்று விமர்சித்திருக்கிறார். ஆளுநர் ரவியின் பார்வைப்படி, அவர் பெருந்தலைவர் காமராசரையும் கொச்சைப்படுத்தி இருக்கிறார்.

திராவிட இயக்கம் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்குச் சாதகமாக இருந்தது என்று கூவுவது ஆளுநர் மாளிகையில் தயாரிக்கப்படும் உரைகளில் அடிக்கடி இடம்பெறுகிறது. பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்தவர்கள் யார், குடிஅரசு ஏட்டில் “இந்த ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்’ எனத் தலையங்கம் எழுதிச் சிறை சென்றவர்கள் யார் என்பதும் வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டினால் புரியும்” என டி.ஆர். பாலுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆளுநர் பேச்சு பற்றிய பா.ஜ.க. கருத்து மாறுகிறது

ஆளுநரின் பேச்சு குறித்த பா.ஜ.கவின் மாநிலத் தலைமையின் கருத்தும் மாறியிருப்பது கவனிக்கத்தக்கதாக இருக்கிறது. கடந்த ஜூலை மாதம் செய்தியாளர்களிடம் பேசிய பா.ஜ.க. மாநிலத் தலைவர் கே. அண்ணாமலை, ஆளுநர் அரசியல் பேசக்கூடாது என்று குறிப்பிட்டார். “ஆளுநர் செய்தியாளர்களை சந்திக்கக் கூடாது, அரசியல் பேசக்கூடாது என்பதே எங்கள் நிலைப்பாடு. மத்தியில் ஆளும் கட்சியின் மாநில முதல்வராக நான் இருந்தாலும், அது தவறான முன்னுதாரணமாக அமையும் என்பதே எனது கருத்து” என்றார்.

ஆனால், இப்போது இந்த விவகாரம் சர்ச்சையாகியிருக்கும் நிலையில், ஆளுநருக்கு ஆதரவாகவே கருத்துகளை அண்ணாமலை தெரிவித்திருக்கிறார். இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், “தி.மு.க. அரசு எல்லாவற்றையும் சாதியாக மாற்றி வைத்திருக்கிறது. அதனால்தான் ஒவ்வொரு குரு பூஜைக்கும் செல்வது ஒரு போர்க்களத்துக்கு செல்வது போன்று உள்ளது. இப்படி தலைவர்களுக்கு சாதி முத்திரை குத்தி, சாதி கலவரம் ஏற்படும் நிலையை ஏற்படுத்தியது தி.மு.கதான். ஆளுநர் இப்படி கூறியதில் என்ன தவறு இருக்கிறது? தமிழகத்தைச் சேர்ந்த எத்தனை சுதந்திரப் போராட்ட வீரர்களின் பெயர்கள் பாடப் புத்தகத்தில் இருக்கிறது என்று தி.மு.க. அரசு ஒரு வெள்ளை அறிக்கை கொடுக்க வேண்டும்” என்று கூறியிருக்கிறார் அவர்.

# டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய சூழலை வைத்திருப்போர் மீது சட்ட நடவடிக்கை!

## பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் எச்சரிக்கை

அம்பாறை, ஒக். 27

அம்பாறை மாவட்டத்தில் பெய்துவரும் மழை காரணமாக தேங்கி நிற்கும் நீர் மூலம் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக காணப்படுவதாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

வீடுகள்,பாடசாலைகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், வெற்று வளவுகள், மதஸ்தலங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் பொதுச்சந்தைகள் போன்ற இடங்களில் மழைநீர் தேங்கிக் காணப்படுவதால் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்கக்கூடும்.எனவே பொது மக்கள் இவ்வாறான இடங்களை அடையாளம் கண்டு நீர் தேங்கி நிற்கும் சூழலை இல்லாதொழிக்குமாறும்,குப்பை கூளங்களை குழிதோண்டி புதைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் தற்போது பரீட்சைகள் இடம்பெற்று வருவதால் பரீட்சைகள் நிறைவு பெற்றதும் பாடசாலை வளாகத்தில் சிரமதானம் மூலம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

வீடுவீடாக பொதுச்சுகாதார பரிசோதகர்கள் தற்போது பரிசீலனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால் அவர்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும், இதனையும் மீறி டெங்கு நுளம்புகள் பரவும் சூழலை வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# நீதிமன்றத்துக்கு சென்ற பெண் மீது கத்திக்குத்து!

கொழும்பு, ஒக். 27

வழக்கு விசாரணையொன்றுக்காக நீதிமன்றத்துக்குச் சென்ற பெண்ணொருவர் மீது கத்திக்குத்துத் தாக்குதல் இடம்பெற்றமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்த பெண்ணொருவர் மீதே குறித்து தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், இதன்போது தாக்குதல் மேற்கொண்ட நபர் அப்பெண்ணின் கழுத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கிவிட்டு முச்சக்கர வண்டியில் தப்பிச் சென்றுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் படுகாயமடைந்த பெண் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார் எனவும், தப்பிச் சென்ற நபரைக் கைது செய்யும் நடவடிக்கைகள் தீவிரமாக இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ஆசிரியர்கள் மீது தாக்குதல் மன்னிப்பு கோரினார் சுசில்



கொழும்பு, ஒக். 27

கல்வி அமைச்சுக்கு முன்பாக நடைபெற்ற ஆசிரியர் - அதிபர் ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த வருத்தம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கல்வி அமைச்சின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

**24/10/2023** அன்று பத்தரமுல்லை பெலவத்தை பிரதேசத்தில் ஆசிரியர் - அதிபர் உள்ளிட்ட கல்வித் துறையினர் முன்னெடுத்த போராட்டத்தின் மீது பொலிஸார் நடத்திய தாக்குதல்கள் தொடர்பில் கல்வி அமைச்சு கவலையை வெளிப்படுத்துகிறது.

கல்வி அமைச்சர் கல்வி மாநாடொன்றுக்காக வெளிநாட்டு சென்றிருந்த சந்தர்ப்பத்திலேயே இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கல்வி அமைச்சர் தனது வருத்தத்தையும் இந்த அறிவிப்பின் ஊடாக தெரிவித்துள்ளார்.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அதிபர் - ஆசிரியர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கல்வி அமைச்சுக்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை கலைக்க பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர் புகை பிரயோகத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

